லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-6 இதழ்-1 ஜூன் -2018 மாதஇதழ் விலை ₹ 10/-

makkalvisaranai@facebook twitter



## சத்தமின்றி களமிறங்கும்

# விஜய்



# வள்ளலார் அருளிய

# கல்ப மருந்து



பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்





- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில் ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்
- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்
- சளி ▪ இருமல் ▪ கப ரோகங்கள்
- கபம் ▪ காசம் ▪ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ▪ பித்தம்







போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்

நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்



சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்

**அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்**

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.

எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

## நீர் மேலாண்மையில் மெத்தனமாக நடந்து கொண்ட மத்திய அரசு

கோடை வழக்கம் போலவே வறட்சியையும் கூடவே தண்ணீர் பற்றாக்குறையையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறது.

நாடு முழுக்கவே தண்ணீருக்குக் கடும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. பாசனத்துக்கு மட்டுமில்லை, குடிநீருக்கே பல மாநிலங்களில், நகரங்களில்கடும் பற்றாக்குறை நிலவுகிறது. மாநில அரசாங்கங்கள் கிராமங்களின் தலையில் கையை வைத்து, நகரங்களின் தாகத்தைத் தீர்க்கும் வேலையில் இறங்கியிருக்கின்றன. பல மாநிலங்களில் நதி நீர் பகிர்வு தொடர்பில் ஒருவருக்கு ஒருவர் முட்டிக்கொள்ளும் சத்தங்களும் கேட்கத் தொடங்கியிருக்கின்றன. ஆனால், நீர் மேலாண்மையை மேம்படுத்துவதற்கான முயற்சிகளையோ, அதற்கான சமிக்ஞைகளையோ எங்கேயும் காண முடியவில்லை.

ஒரு வருஷத்துக்கு மேலாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மாற்றி மாற்றி விவசாயிகளின் போராட்டக் குரல்கள் கேட்டபடியே இருக்கின்றன. விவசாயிகளின் போராட்டங்களுக்கும் விவசாய நீர்த் தேவைகளுக்குமான உறவை அரசு பொருட்படுத்துவதாய்த் தெரியவில்லை.

வறட்சியைச் சந்திக்கும் மாநிலங்களில் உள்ள விவசாயிகள் ஒவ்வொரு முறை தென்மேற்குப் பருவ மழைக் காலம் நெருங்குகையிலும் இந்த மழைக் காலத்தையேனும் பயன்படுத்தி, வறண்டு கிடக்கும் ஆறுகளுக்கும் ஓடைகளுக்கும் புத்துயிர் ஊட்டிவிடலாம் என்ற நம்பிக்கையுடனே அரசை எதிர்நோக்குகிறார்கள். ஆனால், ஏமாற்றம் மட்டுமே அவர்களுக்குக் கிடைக்கிறது.

பெருகிக்கொண்டேயிருக்கும் மக்கள்தொகை, விரிந்து கொண்டேயிருக்கும் நகர்மயமாக்கல் சூழலில் கிராமங்களை அவற்றின் நிலைகுலைவிலிருந்து காக்கத் தண்ணீர் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுப்பது மிக மிக முக்கியமானது. விவசாயிகளும் விவசாயமும் இல்லையென்றால், கிராமங்கள் அனாதையாகிவிடும். கிராமங்களின் சீர்குலைவு நகரங்களின் நிம்மதி குலைவாக மாறும். நீர் மேலாண்மைத் திட்டங்களை அரசு முன்னெடுத்தால், சமூகத்தின் பல்வேறு குழுக்களும் அதில் கை கோக்கும் சாத்தியங்கள் இன்று அதிகரித்திருக்கின்றன.

தமிழ்நாட்டில் முதல்வர் ஜெயலலிதா முன்னெடுத்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை இந்தத் தருணத்தில் நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும். வீடுகள் தோறும் மழைநீர் சேகரிப்புத் திட்டக் கட்டுமானத்தை உருவாக்குதல் என்பது இந்தப் பணிகளின் தொடக்கப் புள்ளியாக இருக்கலாம். பாசன வாய்க்கால்களைச் சீரமைத்தல், நீர்நிலைகளைத் தூர்வாருதல், நீராதாரங்களைப் பெருக்குதல், நதிநீர் மேலாண்மை, பகிர்வுக்கான அமைப்புகள் என்று விரிவாக்கலாம்.

அதேபோல, மக்களிடமும் சிக்கன நீர்ப் பயன்பாட்டின் அவசியத்தை வலியுறுத்த வேண்டும். விவசாயிகளுக்குத் தண்ணீரைச் சிக்கனமாகவும் பயனுள்ள வகையிலும் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களைக் கொண்டுசேர்க்க வேண்டும். உரிய கருவிகளையும் அரசு வழங்க வேண்டும்.

- ஆசிரியர்



# தூத்துக்குடி கலவர பூமியானது ஏன்?

கலவர பூமியாக மாறியிருக்கும் தூத்துக்குடி ஆட்சியர் அலுவலகம். வரவேற்பறை நுழைவுப் பகுதி முழுவதும் கற்களும், கண்ணாடி சிதறல்களும் பரவிக் கிடக்க, ஆங்காங்கே வன்முறைக் கும்பலால் தீவைக்கப்பட்ட வாகனங்கள் பற்றி எரிகின்றன.

ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடக்கோரி 100 வது நாள் மக்கள் நடத்திய போராட்டம், போர்க்களமானது; ரணகளமான தூத்துக்குடியில், அப்பாவி பொதுமக்கள் 10 பேர் போலீசாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

அமைதியாக போராடி வந்த இந்த கூட்டம், வன்முறை செய்ய வந்த கும்பல் இல்லையே!. கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட வந்தது ஒரு தவறா?. அரசு அலுவலகத்தை முற்றுகை யிட்டால், அரசின் முடிவுக்கு எதிர்ப்பு தெரி வித்தால் 'ஜாலியன்வாலாபாக் படுகொலைகள்' நடத்தப்படும் என்று தமிழக அரசும், காவல் துறையும் மறைமுகமாக கூறுகிறதா? என்று பாதிக்கப்பட்ட மக்கள் கொதிக்கும் அளவுக்கு போனதற்கு யார் காரணம்? அப்படி என்ன நடந்து விட்டது தூத்துக்குடியில்?. மனித உயிர் களை இப்படி கொத்துக்கொத்தாக சுட்டு வீழ்த்த வேண்டிய கொடூரமான அவசியம்தான் என்ன வந்துவிட்டது?

சமீபக் காலத்தில் தமிழகக் காவல் துறை வரலாற்றில் சமூக விரோதிகள் மீதுகூட இவ்வளவு பெரிய துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டது இல்லை. ஆனால், தூத்துக்குடியில் பொதுமக்கள் மீது காவல் துறை நடத்திய இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவம் தமிழ கக் காவல் துறையின் மீதும் தமிழக அரசின் மீதும் அழியாத களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

காவல் துறையில் உரிய தலைமை தமிழகத்தில் இருந்திருந்தால் நிச்சயம் சொந்த மக்களின் குருதி, தூத்துக்குடியில் சிதறி யிருக்காது. கோவில்பட்டி விழாவுக்கு சென்ற முதல்வர் ஸ்டெர்லைட் போராட்டக்குழுவிடம் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தால் இந்த கோரம் அரங்கேறி இருக்காது. 10 பேர் உயிர்கள் இப்போது பறிக்கப்பட்டு விட்டது. இப்போது ஆறுதல் கருத்துக்கள், விசாரணைகள், நிதியுதவி கள், அரசு வேலை இந்த மக்கள் மீது நிகழ்த்தப் பட்ட கொடூரத்திற்கு மருந்தாக முடியாது. ஏனெனில் நிகழ்த்தப்பட்டு இருப்பது ஒரு வித கொடூரம். தூத்துக்குடி, ஒன்றும் காஷ்மீர் எல்லையில் இல்லை தானே.

**தீராத களங்கத்தை ஏற்படுத்திய தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு: விதிமுறைகள் என்ன சொல்கின்றன?**

தமிழகக் காவல் துறைக்கு துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் புதியதல்ல. 1957-ல் முதுகுளத்தூர் கலவரத்தில் போலீஸார் துப்பாக்கிசூட்டில் 17 பேர் கொல்லப்பட்டனர். தமிழகக் காவல் துறையில் 1970-களின் இறுதி வரை 'மலபார் ஸ்பெஷல் போலீஸ்' என்கிற அவசரப் படை, கலவரங்களை அடக்குவதற்கென்றே அமைக் கப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட இது ராணுவப் படைப் போலவே செயல்பட்டது. ராணுவத் தினரை போலவே தனி சீருடை, அரைக்கால் டவுசர், இரும்புச் சட்டி தொப்பி, இரும்புக் கேடயம், இரும்பு பூண் பூட்டப்பட்ட ஈட்டி மர லத்தி, கண்ணீர் புகை 'கிரினேடு' கன், '303' ரக துப்பாக்கி தோட்டாக்கள், எல்.எம்.ஜி.

துப்பாக்கி கன், ஸ்டென் கன் சகிதம் எந்நேரமும் தயாராக இருக்கும் மலபார் போலீஸ் படை தேவைப்பட்டால் நேபாளம் வரை சென்று கலவரங்களை அடக்கியது.

இந்தப் பிரிவு ஒரு பட்டாலியனுக்கு 750 பேர் கொண்ட குழுவாக பிரிக்கப்பட்டு ஒரு தலைமை கமாண்டண்ட் - தளவாய் என்கிற பொறுப்பாளர் வசம் ஒப்படைக்கப்பட்டது. இதன் கீழ் 'கம்பெனி' என்கிற படைப் பிரிவு பிரிக்கப்பட்டு ஒவ்வொரு படையிலும் 120 பேர் நியமிக்கப்பட்டனர். முதல் பட்டாலியன் படை திருச்சி தொடங்கி முறையே ஆவடி, வீராபுரம், கோவைப் புதூர், ஆவடி எம்.எம். நகர் (மகளிர் பட்டாலியன்), மதுரை, போச்சம் பள்ளி, டெல்லி - திஹார் சிறை பாதுகாப்பு பட்டாலியன், மணிமுத்தாறு, உளுந்தூர் பேட்டை, ராஜபாளையம், பழநி, சுந்தரம்பள்ளி, வீராபுரம் என சுமார் 15 இடங்களை மையமாக கொண்டு செயல்பட்டது. கிட்டத்தட்ட ஆங்கி லேய அரசாங்கம் சுதந்திரப் போராட்டங்களை அடக்க கையாண்ட மூர்க்கத்தனமான வழி முறைகளையே இவர்களும் கையாண்டனர்.

1971-ல் கோபாலசாமி அய்யங்கார் தலைமையில் போலீஸ் சீர்த்திருத்த கமிஷன் அமைக்கப்பட்டு, மேற்கண்ட மூர்க்கத்தனமாக தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு, மலபார் பிரிவும் கலைக்கப்பட்டது. ஆனால், அதன் பின்பும் காவல் துறையின் அடக்குமுறைகள் குறையவே இல்லை.

மெரினா கடற் கரையை அழகுப்படுத்த எதிர்ப்பு தெரிவித்த மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு, மின் கட்டணத்தை குறைக்கக் கோரி நாராயணசாமி தலைமையில் மாநிலம் முழு வதும் போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு, அருப்புக்கோட்டை அருகே வாகைக்குளத்தில் ஆழ்துளைக் கிணறு அமைக்க எதிர்ப்பு தெரிவித்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு, திருச்சி சிம்கோ மீட்டர் ஆலைத் தொழி லாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு, வியாசர்பாடி துப்பாக்கிச் சூடு என நிறைய துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடந்தன. மீனவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் நிறையப் பேர் இறந்தார்கள்.

இதன் பின்பு மனித உரிமை அமைப்புகள் நடத்திய தொடர்போராட்டங்களின்விளைவாக காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்து வதற்கான தெளிவான நிர்வாக நடைமுறை விதிகள் வகுக்கப்பட்டன. இதற்கு 'மாப் ஆப ரேஷன்' என்று பெயரிடப்பட்டது.

இதன் விதிமுறைகளின்படி முதலில் சட்ட விரோதமாகக் கூடியிருக்கும் கூட்டத்துக்கு முன்னதாக 500 மீட்டர் தூரத்தில் காவல் படையினர் அணிவகுத்து நிற்க வேண்டும். முன் வரிசையில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை கையாளும் அணியினரும், அடுத்த 3 வரிசை களில் 'லத்தி சார்ஜ்' அணியினரும், அடுத்த வரிசையில் குறைவான எண்ணிக்கையிலான துப்பாக்கி ஏந்திய அணியினரும், இறுதி வரிசையில் முதலுதவி அணியினரும் இருக்க வேண்டும். முன்னறிவிப்பாக மைக்கில்




எச்சரித்து, எச்சரிக்கை கொடியை உயர்த்திப் பிடிக்க வேண்டும். அப்போதும் கலைந்து போகாவிட்டால் கண்ணீர்ப் புகைகுண்டுகளைத் தரையில் படும்படியாக 45 டிகிரி கோணத்தில் வைத்துச் சுட வேண்டும்.

தொடர்ந்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ரப்பர் குண்டுகளையும் வீசலாம். அதன் பின்பு லத்தி சார்ஜ். அப்போதும் கலவரம் அடங்க வில்லை என்றால் துப்பாக்கி அணியினர் இரு வரிசையாக சிறிது முன்னேறி, துப்பாக்கியில் தோட்டாக்களை நிரப்புவார்கள். காவலர் ஒருவர் 5 அடி முன்னால் சென்று மீண்டும் எச்சரிப்பார். இதன் பின்பே அதிகாரி குறிப் பிட்ட ஒரு காவலரிடம் கூட்டத்தில் இருக்கும் குறிப்பிட்ட ஒரு ஆளை (முக்கிய நபர்) மட்டும் காலில் சுடும்படி உத்தரவிடுவார். அந்த நபர் சுடப்பட்டதும் கூட்டம் கலைந்து ஓடும் என்பது காவல் துறையினரின் கணிப்பு. அதன் பின்பு உடனடியாக முதலுதவி அணியினர் முன்னேறிச் சென்று குண்டடிப் பட்ட நபருக்கு

முதலுதவி சிகிச்சை அளிக்க வேண்டும். இந்த நடைமுறைகள் இப்போது பின்பற்றப்படுவது இல்லை.



**போராட்டங்கள் ஏன் கலவரங்களாகின்றன?**

தூத்துக்குடியில் நடந்த மக்கள் போராட்டம் கொடூரமான உயிர் பலிகளைச் சந்தித்திருக்கிறது. தமிழகத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக ஆங்காங்கே நடக்கிற மக்கள் போராட்டங்களும், அவற்றில் தொடர்ந்து ஏற்பட்டு வருகிற இழப்புகளும் ஒருவிதக் குற்றவுணர்வை ஏற்படுத்துகிறது.

போராட்டத்தில் வன்முறை கூடாது என்பதே என்னுடைய நிலைப்பாடு. அதேநேரம், போராடுவதே வன்முறை ஆகிவிடாது. பாதிப்புகள் அதிகரிக்கும்போது போராடுவதுதான் மக்கள் முன்னிருக்கும் ஒரே வழி. மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு ஆட்சியாளர்கள் மக்களுடைய பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே தீர்க்க வேண்டும்.

தூத்துக்குடியில் நடந்திருப்பது ஏதோ சாதிக் கலவரமோ, மதக் கலவரமோ அல்ல. வாழ்வாதாரத்துக்கான நீண்ட காலப் போராட்டம். மக்கள் 'ஸ்டெர்லைட் ஆலை'க்கு எதிராக திடீரென்று ஒரு நாளில் வீதிக்கு வந்து போராடவில்லை. 25 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் இந்த ஆலைக்கு எதிராகத் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கிறார்கள். "ஆபத்து நிறைந்த இந்தத் தொழிற்சாலை எங்களுக்கு வேண்டாம்" என்று மகாராஷ் டிர மாநில மக்களால் நிராகரிக்கப்பட்டு, தமிழ்நாட்டு மக்கள் மீது சுமத்தப்பட்ட ஆலை இது.

சின்னகுழந்தைகள்கூட 'ஸ்டெர்லைட் ஆலை எங்களுக்கு வேண்டாம்' என்று அறிவிப்புப் பலகை ஏந்தி, களத்தில் நின்றனர். ஒரு சமூகத்தில் குழந்தைகள்கூடப் போராட வேண்டியிருக்கிற சூழல் அவமானகரமானது. மக்கள் எதிர்ப்பு, அறிஞர்கள் எதிர்ப்பு, சட்டப் போராட்டம் கடந்து, ஆபத்து விளைவிக்கிற ஒரு ஆலை இயங்குவது நியாயப்படுத்தவே முடியாதது. பல்வேறு அத்துமீறல்களைச் செய்து, மக்களின் உயிருக்கும், தூத்துக்குடி பகுதியில் உள்ள நிலம், நீர், காற்று அனைத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் ஒரு தொழிற்சாலையை இத்தனை எதிர்ப்புகளையும் மீறி என்ன காரணத்துக்காகச் செயல்பட அனுமதிக்கிறார்கள்?

படப்பிடிப்புக்காகப் பல முறை நான் தூத்துக்குடி சென்றிருக்கிறேன். அங்குள்ள மக்களிடம் பேசியிருக் கிறேன். சாதரண மக்களிடம் பேசும்போதுகூட, 'ஸ்டெர்லைட் ஆலை வேண்டாம்' என்று சொல்வார்கள். காரணங்கள் இல்லாமல் இல்லை. பாதிப்புகள் அப்படி!

*2012*-ல் மட்டும் *2,552* பேர், தூத்துக்குடி அரசு மருத்துவமனையின், புற்றுநோயாளிகள் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுச் சென்றிருக்கின்றனர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் அறிய முடிந்த தகவல் இது. தொழிற்சாலையைச் சுற்றியுள்ள பகுதியில் நிலத்தடிநீர் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை. ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளால் விவசாய நிலங்கள் பாதிப்படைந்திருக்கின்றன. நச்சு கலந்த காற்றைச் சுவாசிப்பதன் மூலம் பல்வேறு விதமான நோய்களால் மக்கள் பாதிப்படைந்திருக்கின்றனர். இதற்கான ஆதாரங்கள் உச்ச நீதிமன்றம் வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

தூத்துக்குடியின் 'ஸ்டெர்லைட்' ஆலைக்கு எதிராக மட்டும் அல்ல; விவசாய நிலங்களையும் வாழ்வாதார இடங்களையும் அழிக்கிற 'ஹைட்ரோகார்பன்திட்டம்', 'மீத்தேன்திட்டம்', 'நியூட்ரினோ திட்டம்' என்று தமிழக மக்கள் இன்று எதிர்க்கும் பல திட்டங்களும் அடிப்படையில் இந்த மண்ணைக் காப்பதற்கான போராட்டங்கள். தங்கள் வாழ்க்கையைக் காத்துக் கொள்வதற்காக மக்கள் தன்னெழுச்சியாக வீதிக்கு வந்து போராடுகிறார்கள். 'ஆபத்துமிக்க திட்டங்கள் அனைத்தையும் ஒரு குப்பைக் கூடைக்குள் தூக்கி எறிவதைப் போல, தமிழகத்தில் செயல்படுத்துகிறார்கள்' என்கிற குற்றச்சாட்டை இங்கே நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**- வீ.சிவசங்கரன்**



# ஆணையமா? வாரியமா? நமக்குத் தேவை எது?

காவிரி நதிநீர்ப் பங்கீட்டுக்காக மத்திய அரசு அறிவித்திருக்கும் 'காவிரி மேலாண்மை ஆணையம்' எந்த அளவுக்கு இந்தப் பிரச்சினையில் தீர்வைத் தரும்? நாடறிந்த நீரியல் நிபுணர் எஸ்.ஜனகராஜனிடம் இது குறித்துப் பேசினேன். இவர் தெற்காசிய நீராய்ச்சி நிறுவனத்தின் தலைவர். காவிரி விவகாரத்தைத் தமிழக விவசாயிகளின் பிரச்சினையாக மட்டும் பார்க்காமல், கர்நாடக விவசாயிகளின் பிரச்சினையாகவும் அணுகும் காவிரிக் குடும்பத்தின் ஒருங்கிணைப்பாளர். இரு தரப்பு நல்லுறவுக்காகத் தொடர் முயற்சிகளை முன்னெடுப்பதோடு, தண்ணீர்ப் பிரச்சினையை எப்படி அணுக வேண்டும் என்பதற்கான உலகளாவியப் பார்வையையும் கொண்டவர்.

சர்வதேச நீர்ச் சட்டங்களின்படி, கீழே உள்ள மாநிலத்துக்குத்தான் நீர் பெறுவதற்கான முதன்மை உரிமை உண்டு. நாம் அதைக் கூடக் கோரவில்லை. பல ஆண்டு போராட்டங்களுக்குப் பின், உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பு வந்த பிறகுகூட மாதவாரி நீர்த் திறப்பை உறுதிசெய்வதற்கான ஒரு நீர்த்துப்போன திட்டத்தைக் கொடுத்திருப்பது மாநிலங்களுக்கு இடையிலான பிரச்சினையை அதிகரிக்கவே உதவும். நிரந்தரத் தீர்வைத் தராது.

காவிரி மேலாண்மை ஆணையத்தை, ராவி-பியாஸ், நர்மதை, கோதாவரி போன்ற நதிகளுக்கான வாரியங் களுடன் சிலர் ஒப்பிடுகிறார்கள். அப்படியல்ல. அதில், உபரி நீரைப் பங்கிடுவது மட்டுமே பிரச்சினை. ஆனால், காவிரி அப்படி இல்லை. இங்கு ஏற்கெனவே பற்றாக்குறை நிலவு கிறது. இருப்பது 50% நம்பகத்தன்மைப்படி 740 டிஎம்சிதான். நான்கு மாநிலங்களுக்கும் தேவையான நீரோ 1,200 டிஎம்சிக்கு மேல். இதற்கான மேலாண்மை வாரியத்தை அமைக்கும்போது மிகமிகக் கவனமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், மேலோட்டமாகவும் அஜாக்கிரதையுடனும் அவசரக்கோலத்துடனும் திட்டத்தை உருவாக்கியிருப்பது மிக வருத்தம் அளிக்கிறது.

நீர்த் தேக்கங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும் என்று சொல்லியிருப்பது தமிழகம் போன்ற மாநிலங்களுக்கும் நல்லது என்று சொல்லப்படுகிறதே?

காவிரி நீர் சேமிப்பு, பங்கீடு, ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்பாடு, நீர்த் தேக்கங்களின் மேற்பார்வை ஆகியவற்றுக்கான அதிகாரம் மேலாண்மை ஆணையத்திடம் இருக்கும் என்று சொல்லிவிட்டு, இன்னொரு இடத்தில், "நீர்த் தேக்கங்களை இயக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கே" என்று சொல்லப்பட்டுள்ளது. இதில் என்ன சிக்கல் என்றால், அணைகளின் கட்டுப்பாடு கர்நாடக அரசிடம் தான் இருக்கும் என்றால், வாரியம் வெறும் ஆலோசனை அமைப்பாகச் சுருங்கிவிடும்.

எந்த மாநிலமும் புதிய அணைகள் கட்டக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிறது. கர்நாடகத்தில் புதிய அணைகள் கட்டினால் தமிழகத்துக்கு நீர் வருவது தடுக்கப்படும். எனவே, அதைத் தடுத்திருப்பது சரி. ஆனால், தமிழ்நாட்டில் புதிய நீர்த்தேக்கங்கள், அணைகள் கட்டினால் கர்நாடகத்துக்கு எந்த பாதிப்பும் இருக்கப்போவதில்லை. தமிழகத்தின்




தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களில்தான் பட்டியலின மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். 21% பட்டியலின மக்கள் அங்கு வசிக்கிறார்கள். இவர்களில் மிகப் பெரும்பாலானோர் நிலமில்லாத் தொழிலாளிகள். அவர்களுக்கு இப்போது வாழ்வாதாரம் இல்லை. வேலை தேடி நாடோடிபோல் திரியும் விரக்திநிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள். அதேபோல் 70-80% சிறு-குறு விவசாயிகள் பெரிய அளவில் கடனாளிகளாகி வாழ்வா தாரப் பிரச்சினையில் மாட்டிக் கொண்டிருக் கிறார்கள்.

இந்த உரிமையை நாம் நிலைநாட்ட வேண்டும்.

*காவிரி நீரை எதிர்நோக்கியிருக்கும் காவி- ரிப் படுகை மாவட்ட விவசாயிகள் மற்றும் மக்களின் இன்றைய நிலை என்ன?*

தமிழகத்தின் 23 மாவட்டங்கள் நீர்த் தேவைக்குக் காவிரியைச் சார்ந்து இருக்கின் றன. குறிப்பாக தஞ்சாவூர், திருவாரூர் மாவட் டங்கள் 100% காவிரியை நம்பியிருக்கின்றன. அங்கு சுத்தமாக நீர் இல்லை. சம்பா சாகு படிக்குக்கூடத் தண்ணீர் வருவது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. மழை வந்தால் வெள்ளம், மழை வரவில்லை என்றால் வறட்சி என்பதுதான் மூன்று காவிரிப் படுகை மாவட்டங் களில் தொடரும் நிலவரம்.

கிணறு, ஆழ்துளைக் கிணறு ஆகியவற்றை வைத்திருப்பவர்கள் ஓரளவு பிழைத்துக் கொள் கிறார்கள். மற்றவர்கள் மிக மோசமாக பாதிக் கப்பட்டிருக்கிறார்கள். வரலாறு காணாத அளவு தற்கொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இது வாழ்வாதாரப் பிரச்சினை. இன்னொரு புறம் மிகப் பெரிய சூழலியல் பிரச்சினையும் உள்ளது. ஆற்றுநீர் கடலுக்குப் போய்ச் சேர வில்லை என்றால், கடல்நீர் உள்ளே வந்துவிடும். ஏற்கெனவே 16 கி.மீ. அளவுக்கு கடல்நீர் உள்ளே வந்துவிட்டது.

ஒட்டுமொத்த நாகப்பட்டின மாவட்டம் 100% உப்பாக மாறிவிட்டதாக மத்திய நிலத்தடிநீர் வாரியம் சொல்கிறது. திருவாரூர் மாவட்டத்தில் 50% உப்பாக மாறிவிட்டது. 20-25% டெல்டா நிலங்கள் விவசாயத்துக்குப் பயனற்ற நிலங்களாக மாறிவிட்டன. அவை விற்கப்படுகின்றன.

*இந்தியாவுக்குப் பொதுவான அதிகாரமாக இருக்கும் மத்திய அரசு காங்கிரஸாக இருந் தாலும் பாஜகவாக இருந்தாலும் இந்த விஷயத் தில் கர்நாடகத்துக்கு ஆதரவாகவே செயல்படும் சூழலை எப்படி மாற்றுவது?*

அரை நூற்றாண்டாக தமிழகத்தில் பிராந்தியக் கட்சிகளே ஆள்கின்றன. மாறாக, கர்நாடகத்தில் தேசியக் கட்சிகள் ஆள்கின்றன. இப்படியான அரசியல் காரணங்களுக்காக தமிழகம் வஞ்சிக்கப்பட்டது என்றால், இந்தியக் கூட்டாட்சி அமைப்புக்கு அது பெரிய அச்சுறுத்தலை உருவாக்கும்.

*தமிழக அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?*

வரலாற்றுபூர்வமாகப் பார்த்தால் தமிழகத் துக்கு ஒதுக்கப்படும் காவிரி நீரின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு நமக்கு ஒதுக்கியது 192 டிஎம்சி. இப்போது அதை உச்ச நீதிமன்றம் 177.25 டிஎம்சியாகக் குறைத்துள்ளது. அதுவும் 15 வருடங்களுக்கு மட்டும். அதற்குப்பின் இதுவும் குறையலாம். மாறாக, நமது தண்ணீர் தேவையோ அதிகரித்துக்கொண்டே இருக்கிறது.

ஒதுக்கீடு இப்படிக் குறைந்துகொண்டே போனால் என்ன ஆகும்? தமிழகத்தை எந்தக் கட்சி ஆண்டாலும் சரி, தமிழகத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படுவது முக்கியம்.

**- அகிலாண்டேஸ்வரி**



# சத்தமில்லாமல் களமிறங்கும் விஜய்

விஜய் எப்போதும் மக்களுக்கு எந்த பிரச்சனை என்றாலும் குரல் கொடுப்பவர். அப்படியிருக்க சமீபத்தில் நடந்த தூத்துக்குடி துப்பாக்கி சூட்டால் விஜய் மிகவும் மனம் வருந்தினார்.

தூத்துக்குடி சென்று நலம் விசாரித்த நடிகர் விஜய். நடிகர் விஜய் சத்தமே போடாமல், எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் தூத்துக்குடிக்கு நள்ளிரவில் சென்று ஸ்னோலின் உள்ளிட்ட துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானோரின் குடும்பத்தினரை சந்தித்து துக்கம் விசாரித்து ஆறுதல் கூறியுள்ளார். மதுரை வந்த விஜய் அங்கிருந்து கார் மூலமாக தூத்துக்குடிக்குப் போயுள்ளார்.

டோல்கேட் வரை காரில் பயணித்த அவர் அதன் பின்னர் தன் ரசிகர் ஒருவரின் பைக்கிலேயே அனைவர் வீட்டிற்கும் சென்று வந்தார். யாரும் அடையாளம் கண்டு விடாதபடி முகத்தை கர்ச்சீப்பால் மூடியபடி அவர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானோரின் வீடுகளுக்குப் போனார். கிட்டத்தட்ட நள்ளிரவில் வந்த விஜய்யைப் பார்த்து குடும்பத்தினர் ஆச்சரியமடைந்தனர்.

எதிர்பாராத வேளையில் விஜய்யைப் பார்த்து அவர்களுக்கு சோகம் கூடி கதறி அழுதனர்.அப்போது 'உங்களை இத்தனை நாட்கள் கழித்தும் சந்தித்ததற்கு மன்னித்து விடுங்கள்' என்று விஜய் கூறினார்.

வாயில் துப்பாக்கியால் சுடப்பட்டு கோரமாக கொல்லப்பட்ட இளம் பெண் ஸ்னோலின், ஜான்சி, கிளாட்சன் உள்ளிட்டோரின் வீடுகளுக்கு சென்றார். குடும்பத்தினரிடம் ஆறுதல் கூறிதரையில் அமர்ந்து பேசினார். விஜய்யைப் பார்த்த குடும்பத்தினர் அழுதபடி நடந்ததை விவரித்தனர்.

அமைதியாக அவர்களுடன் அமர்ந்து அதைக் கேட்ட விஜய் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். சேரில் உட்காருமாறு கூறியும் விஜய் மறுத்து விட்டார். ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ. 1 லட்சம் நிவாரணத் தொகையையும் அவர் வழங்கினார். அதற்கானகாசோலையை குடும்பத்தினரிடம் கொடுத்தபோது அவர்கள் அழுதபடி அதைப் பெற்றுக் கொண்டனர்.

**- முனைவர் ஆ.மவுரியன்**


# அகத்தியர் ஆயுர்வேத மருத்துவமனை புதிய உதயம்








சென்னை, சாலிகிராமத்தில் இயங்கி வரும் அகத்தியர் மூலிகை மருத்துவ மையத்தின் புதிய கிளை சென்னை, இராமாபுரத்தில் துவங்கியுள்ள அகத்தியர் ஆயுர்வேத மருத்துவ மனையை மக்கள் விசாரணை ஆசிரியர் முனைவர் ஆ. மவுரியன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.





# சமூக வலைதளங்களுக்கு ரூ.1 லட்சம் அபராதம்

## உச்ச நீதிமன்றம் கண்டனம்

சமூக வலைதளங்களில் பாலியல் பலாத்கார வீடியோக்கள் பகிரப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து பதிலளிக்க தவறிய கூகுள், பேஸ்புக் உள்ளிட்ட பிற நிறுவனங்களுக்கு உச்ச நீதிமன்றம் ரூ.1 லட்சம் அபராதம் விதித்துள்ளது.

சமூக வலைதளங்களில் பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் குற்றங்கள் தொடர்பான வீடியோக்கள் பகிரப்படுவது தொடர்பாக ஐதராபாத்தை சேர்ந்த பிரஜ்வாலா தொண்டு நிறுவனம், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கடந்த 2015ல் கடிதம் மூலம் புகார் தெரிவித்தது. அதன் அடிப்படையில், பாலியல் பலாத்காரம், குழந்தைகள் ஆபாச வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பகிரப்படுவது தொடர்பான பிரச்னைகள் குறித்து உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு தொடர்ந்து விசாரித்து வருகிறது.



கூட்டு பலாத்காரம், குழந்தைகள் பலாத்காரம், பாலியல் தொல்லைக்கு ஆளாகும் குழந்தைகளின் வீடியோக்கள் தொடர்பான பொதுமக்களின் புகார்களை விசாரிக்க தனி அமைப்பை உருவாக்கவும், புகார்களை தெரிவிக்க தனி இணையதள முகவரியை தொடங்கும்படியும் மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், பலாத்கார வீடியோக்கள் பகிரப்படுவதை தடுப்பது தொடர்பாக கூகுள், பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதள நிறுவனங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளன என்பது குறித்து பதிலளிக்கவும் கடந்த மாதம் 16ம் தேதி உத்தரவிட்டது.

இந்த வழக்கு, நீதிபதிகள் மதன் பி லோகூர், லலிதா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, சமூக வலைதளங்கள் தரப்பில் எந்த பதிலும் தரப்படாததற்கு நீதிபதிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர். அவர்கள் பிறப்பித்த உத்தரவில், ''யாஹூ, பேஸ்புக் அயர்லாந்து, பேஸ்புக் இந்தியா, கூகுள், மைக்ரோசாப்ட், வாட்ஸ் அப் ஆகிய சமூக வலைதளங்கள் பாலியல் பலாத்கார வீடியோக்களை தடுப்பது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகள் குறித்து எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை.

இது கடும் கண்டனத்திற்குரியது. எனவே, அந்நிறுவனங்களுக்கு தலா ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படுகிறது. மேலும், சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்'' என கூறி வழக்கை ஒத்திவைத்தனர். இதற்கிடையே, சைபர் குற்றங்கள் தொடர்பான புகார்களை அளிப்பதற்கான புதிய இணையதளம் ஜூலை 15ம் தேதிக்குள் தயாராகி விடும் என மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ராம்குமார்



# டூத்பேஸ்டில் புளோரைடு இருக்கா..!

குழந்தைகளை கவர்வதற்காக பற்பசை தயாரிப்பு நிறுவனங்கள் பல்வேறு சுவைகளில் பற்பசைகளை தயாரிக்கின்றன. வேறுபட்ட சுவைகளின் காரணமாக பல் துலக்கும்போது மட்டும் பற்பசை பயன்படுத்துவதோடு நின்று விடாமல் பெற்றோருக்கு தெரியாமல் அவ்வப்பொழுது பற்பசையை குழந்தைகள் சாப்பிட்டு விடுகின்றன. பற்பசைதானே இதனால் என்ன வந்து விடப் போகிறது என கவனக்குறைவாக இருந்து விடுகிறார்கள் பெற்றோர்கள். ஆனால் இதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டிய நிறைய விஷயங்கள் உள்ளன.

மே 16 அன்று கூடியிருக்கிற இந்தியாவின் மருந்து தொழில்நுட்ப ஆலோசனை அமைப்பின் (டிடிஏபி) கூட்டத்தில் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று குழந்தைகள் பயன்படுத்துகிற பற்பசைகளிலுள்ள புளோரைடின் அளவை ஒரு மில்லியனுக்கு ஆயிரம் என்ற அளவில் (1,000 பிபிஎம்) குறைக்கவேண்டும் என்பது.

பற்பசையில் எவ்வளவு புளோரைடு உள்ளது, பற்பசை என்று காலாவதியாகிறது என்பது போன்ற விவரங்களை பற்பசை அட்டையில் நிறுவனங்கள் தெளிவாக குறிப்பிடவேண்டும் என்ற விதிமுறையைக் கொண்டுவரவும் டிடிஏபி முடிவு செய்துள்ளது. இதற்காக 1945-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டத்தின் 149-ஏ பிரிவில் திருத்தம் கொண்டுவர முடிவு செய்துள்ளது டிடிஏபி.

வெறும் 0.1-ல் இருந்து 0.3 மில்லி கிராம் புளோரைடு கூட ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என சொல்கிறார்கள். இரைப்பை பகுதியில் வலி, வாந்தி, குமட்டல், தலைவலி போன்ற பல பிரச்சினைகள் இதனால் குழந்தைகளுக்கு ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. புளோரைடு என்பது பல்லை உறுதியாக்குவதற்கான ஒரு பொருள். பெரியவர்களின் பற்பசையில் புளோரைடு அளவு 1000 பிபிஎம்மைவிட அதிகமாக இருக்கும். இதனால் பெரியவர்களுக்கு பாதிப்பு எதுவும் கிடையாது.

ஆனால் ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் பல், சில முறைகள் உதிர்ந்தபின் மீண்டும் முளைத்து அதன்பின் உறுதியாகும் வகையில் அமைந்துள்ளது. புளோரைடை அதிக அளவில் குழந்தைகள் எடுத்துக்கொள்ளும்போது அவர்களது பற்கள் சீக்கிரமாகவே உறுதியாகி விடுவதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இது குழந்தைகளின் பல் நலனுக்கும், வளர்ச்சிக்கும் ஏற்றதல்ல. புளோரைடு அதிகமுள்ள பற்பசையை அளவுக்கு அதிகமாக தொடர்ந்து பயன்படுத்துவதால் குழந்தைகளின் பல்லில் நிரந்தரமாக கறை படியும் வாய்ப்புள்ளது. குழந்தைகள் பல் துலக்கும்பொழுது பற்பசையை வெளியே துப்புகிறார்களா அல்லது அப்படியே விழுங்கிவிடுகிறார்களா என்பதை பெற்றோர்கள் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயன்படுத்தும் பற்பசையில் உள்ள புளோரைடு அளவு என்ன என்பதையும் பெற்றோர்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஆனால் பற்பசை நிறுவனங்கள் இந்தத் தகவல்களை பெரிதாக அச்சிடாமல் மிகச் சிறியதாக அச்சிட்டு வருகிறார்கள். இந்த செயல்பாட்டுக்கு எதிரான டிடிஏபியின் இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்க ஒன்று.

**- சிலம்பரசு**



# ஜன்தன் கணக்கை முடக்கும் வங்கிகள்... அதிர்ச்சியில் வாடிக்கையாளர்கள்..!

ஜன்தன் உள்ளிட்ட அடிப்படை சேமிப்பு கணக்குகளில் 4 முறை பரிவர்த்தனை செய்த பிறகு, அந்த கணக்குகளை வங்கிகள் முடக்குவதால் வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

அனைத்து மக்களுக்கும் வங்கிச்சேவை கிடைக்கச்செய்யும் வகையில் 2014 ஆகஸ்ட்டில் ஜன்தன் திட்டம் தொடங்கப்பட்டது. இதற்கு முன்பு 2012 ஆகஸ்டில் அடிப்படை சேமிப்பு கணக்கு திட்டத்தை ரிசர்வ் வங்கி அறிமுகம் செய்திருந்தது. இதில் கணக்கு துவக்கிய வாடிக்கையாளர்களுக்கு எந்த ஒரு கட்டணமும் கிடையாது. குறைந்த பட்ச இருப்புத்தொகை பராமரிக்க தேவையில்லை.

மாதம் 4 முறை கட்டணமின்றி பணம் எடுக்கலாம். ஜன்தன் போன்ற அடிப்படை வங்கி கணக்கு உள்ள வாடிக்கையாளர்கள் 4 முறைக்கு மேல் பரிவர்த்தனை செய்ய வேண்டுமானால் அவர்கள் அவற்றை சாதாரண வங்கி கணக்குகளாக மாற்றிக்கொள்ளுமாறு ரிசர்வ் வங்கி தெரிவித்திருந்தது.

இலவசமாக வழங்கப்படும் 4 பரிவர்த்தனைகள் ஏடிஎம்களில் பணம் எடுப்பதற்கு மட்டுமே பொருந்தும் என வாடிக்கையாளர்கள் கருதியிருந்தனர். ஆனால் ஏடிஎம் மட்டுமின்றி, ஆர்டிஜிஎஸ், என்இஎப்டி பரிவர்த்தனைகள், இஎம்ஐ மற்றும் காசோலை பரிவர்த்தனைகள், வங்கி கிளைகளில் சென்று பணம் எடுப்பது, வேறு கணக்குகளுக்கு வங்கி கிளையில் பண பரிமாற்றம், இன்டர்நெட் மூலம் ஆன்லைனில் பணம் செலுத்துவது என அனைத்தையுமே இலவச பரிவர்த்தனை எண்ணிக்கையாக வங்கிகள் கருதுகின்றன.

எனவே, மேற்கண்ட வகையில் எந்த வடிவில் பரிவர்த்தனை நடைபெற்றிருந்தாலும், 4 பரிவர்த்தனை ஆன பிறகு வங்கிகள் அந்த கணக்கை முடக்கி விடுகின்றன. அந்த மாதம் முழுவதும் அடிப்படை கணக்கு முடக்க நிலையிலேயே இருக்கும். அதன்பிறகுதான் பரிவர்த்தனைக்கு மீண்டும் அனுமதிக்கப்படும்.

உதாரணமாக ஒரு வாடிக்கையாளர்கள் மாதத்தின் 20 நாளில் மூலம் ஏடிஎம்மில் 2 முறையும், டெபிட் கார்டு மூலம் 2 பரிவர்த்தனைகளும் செய்திருந்தால் எஞ்சிய நாட்களுக்கு கணக்கு முடக்கப்பட்டு விடும். அடுத்த மாதம்தான் அவர் தனது கணக்கில் உள்ள பணத்தை எடுக்க முடியும். மும்பை ஐஐடி நடத்திய தொழில்நுட்ப அறிக்கையில் இந்த

விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

வங்கிகளின் இந்த போக்கு, வாடிக்கையாளர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வங்கி கணக்கில் பணம் இருந்தாலும், அவசர தேவைக்கு கூட எடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்பதால், சேமிப்பு இருந்தும் பலன் கிடைப்பதில்லை. அதற்கு மேல் பயன்படுத்த வேண்டுமானால் அந்த கணக்கை வழக்கமாக சேமிப்பு கணக்காக மாற்ற வேண்டும். அவ்வாறு மாற்றினால், வங்கிகளுக்கு ஏற்ப குறைந்தபட்ச இருப்புத் தொகையாக ரூ500 முதல் ரூ5,000 வரை பேண வேண்டி வரும்.

குறைந்தபட்ச இருப்புத்தொகை பேண விரும்பாதவர்கள் தங்களது கணக்கை அடிப்படை வங்கி கணக்காக மாற்றிக்கொள்ளலாம் என ரிசர்வ் வங்கி சில தினங்களுக்கு முன்பு அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இந்நிலையில், வங்கிகளின் திடீர் கெடுபிடியால் வாடிக்கையாளர்கள் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர். இது வங்கி கணக்கு அனைவருக்கும் அவசியம் என்பதற்காக கொண்டுவந்த ஜன்தன் போன்ற திட்டங்களை பாழாக்குவதாக இருக்கிறது என வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். ஒரு சில தனியார் வங்கிகள் 4 முறைக்கு மேல் பணம் எடுக்க அனுமதிக்கின்றன.

சில வங்கிகள் 4 முறை பரிவர்த்தனை செய்தவரின் அடிப்படை வங்கி கணக்கை வழக்கமான வங்கி கணக்காக மாற்றிவிடுகின்றன என வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கிகள் தரப்பில் கூறப்படுகிறது. டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மத்திய அரசு ஊக்குவித்து வருகிறது. இதனால் பீம் ஆப்ஸ் மற்றும் ஆன்லைன், டெபிட்கார்டு பரிவர்த்தனைகளை அடிப்படை வங்கி கணக்கு வைத்திருப்போரும் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் டிஜிட்டல் இந்தியா திட்டத்துக்கு எதிராக வங்கிகளின் நடவடிக்கை உள்ளது என வாடிக்கையாளர் தெரிவிக்கின்றனர்.

**– வ.சங்கர்**

# பென்ஷன் பணம் கிடைக்காமல் அல்லாடும் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்

சென்னை மாநகராட்சி மழலையர் பள்ளி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் வளர்மதி, மவுளி மாலா ஆகியோர் கூட்டாக நிருபர்களை சந்தித்து கூறியதாவது:

சென்னை மாநகராட்சியின் மழலையர் பள்ளிகளில் ஆசிரியராக 1998ம் ஆண்டு பணியில் சேர்ந்தோம். 96 ஆசிரியர்கள் பணிபுரிந்து வந்தோம். எங்களை பகுதி நேர ஆசிரியர்கள் என்று குறிப்பிட்டு பென்ஷன் தர மறுத்து வருகின்றனர். காலை 8.45 மணிக்கு பணிக்கு சென்று மாலை 4 மணி வரை பணிபுரிந்துள்ளோம். வருகை பதிவேட்டில் தினமும் 2 முறை கையெழுத்திடுகிறோம். அவ்வாறு, இருக்க எப்படி எங்களை பகுதி நேர ஆசிரியராக குறிப்பிட முடியும்.

15 ஆசிரியர்கள் வரை பென்ஷன் உள்ளிட்ட எந்த சலுகைகளை பெறாமல் ஓய்வு பெற்றுவிட்டோம். இது தொடர்பாக, மாநகராட்சி கமிஷனரிடம் பலமுறை முறையிட்டும் பலனில்லை. மழலையர் பள்ளிகளால் தான் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆனால், எங்களுடைய முழு உழைப்பை பெற்று கொண்டு, உரிய சலுகைகளை கொடுக்காமல் மெத்தனமாக செயல்படுகின்றனர். அரசு தரப்பில் முறையிட்டால், கஜானாவில் பணம் இல்லை என்று கூறுகின்றனர். இதனால், நாங்கள் பொருளாதார ரீதியாக கடும் இன்னல்களை சந்தித்து வருகிறோம். எனவே, மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு பென்ஷன் வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

ஓய்வுபெற்ற ஆசிரியர் பிரேமா கூறுகையில், ''பென்ஷன் கொடுக்காததால் வீட்டு வாடகை கூட கொடுக்க முடியவில்லை. என்னுடைய கணவருக்கு கண் ஆப்ரேஷன் செய்யப்பட்டுள்ளது. மருத்துவ செலவுக்கு கூட பணமின்றி அல்லாடி வருகிறேன். போக்குவரத்துக்கு கூட பணம் இல்லாமல் முதியோர் பாஸ் வாங்கி சென்று வரும் நிலை உள்ளது'' என்றார்.



# எண்ணம் போல் வாழ்க்கை அதிர்ச்சி தரும் ஆராய்ச்சி முடிவுகள் !

டிவி நாடகங்களில் வரும் அழுகைகள், குமுறல்கள், ஒப்பாரிகள், உரக்கக் கத்திப் பேசுதல், சோக இசைகள் மற்றும் சாவு மேள தாளம் இசைகள் இவையெல்லாம் உங்கள் வீட்டில் இருக்கும் லக்ஷ்மி கடாக்ஷத்தைச் சீர்குலைத்து கெடுத்துவிடும். இதனால் அபசகுனமான நிகழ்ச்சிகளின் காட்சிகள் TVக்குள் நடந்தாலும் அதன் ஒளி ஒலி அதிர்வுகளின் நிகழ்வுகள் நமது வீட்டிற்குள்ளேயே நடப்பதால் குடும்பத்தில் பல பிரச்சனைகள் உருவாகும் என்பது அசைக்க முடியாத ஆன்மீக நம்பிக்கையாளர்களின் ஆய்வு ஆகும்.

இதனால் பல நோய்கள் வரலாம் வீட்டில் பணம் தாங்காமல் போகலாம், வீண் செலவுகள் ஏற்படலாம் தொழில் நஷ்டம் ஏற்படலாம், என்று இப்படி பட்ட அதிர்ச்சி தரும் ஆன்மீக ஆய்வு முடிவுகள் ஒரு பக்கம் எச்சரிக்கை செய்கிறது..

அதேசமயம் ஆன்மீக நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் அதிர்ச்சி தரும் மருத்துவ ஆராய்ச்சி ஆய்வு முடிவுகள் மிகவும் அபாயகரமானதாக உள்ளது.

**ஆம், உங்கள் உடல் நலத்தையும் சீரழித்துவிடும் அதிர்ச்சி ரிப்போர்ட்**

இதனால் கண் பார்வை கோளாறில் ஆரம்பித்து மன இறுக்கம், மன அழுத்தம், மன நோய் வந்து, உடல் எடை அதிகரித்து, இதன் தொடர்ச்சியாக சர்க்கரை வியாதி, மாரடைப்பு இருதய கோளாறு, ரத்த அழுத்தம், கழுத்து எலும்பு தேய்மானம், தலைசுற்றல் தலைவலி, மூளை மற்றும் நரம்பியல் சம்பந்தமான பிரச்சனைகள் வரும்.

இதற்கு எல்லாம் முக்கியமாக காரணம். பிறரை எப்படிக் கெடுப்பது, அழிப்பது, துன்புறுத்துவது, கணவன் மனைவிக்குள் ஒருவரை ஒருவர் ஏமாற்றி கள்ளக்காதல் தொடர்பு எப்படி என்று கற்றுக்கொடுக்க படுகிறது.

குடும்பத்தினருக்குள் மாமியார் மருமகள் சண்டை, அண்ணன் தம்பி சண்டை சந்தேகப்படுவது, சகுனி வேலை பார்ப்பது, எல்லாம் கற்றுக் கொள்ளலாம்.





அதோடு நேர்மையான அரசு அதிகாரிகளை, எப்படி லஞ்சம் வாங்கியது போல் திட்டமிட்டு மாட்டி விடுவது என்றும் கற்றுக் கொடுக்கபடுகிறது. பிறர் தொழிலை எப்படி கெடுப்பது எப்படி நம்பிக்கை துரோகம் செய்வது, என்பது எல்லாம் காண்பிக்கப் பட்டு மக்களுக்கு பழக்குவிக்கப்படுகிறது.



இவையெல்லாம் விட பெரிய பேரிழப்பு உங்கள் அருமை குழந்தைகளின் விலை மதிப்பற்ற எதிர்காலம் பாழாக்கப்படுகிறது. இத்தனை பாதிப்புகள் தெரிந்ததும் தொலைக் காட்சி நிறுவனங்கள் தங்கள் TRP ரேட்டிங் அதிகரித்திட சுய லாபத்துக்காக இப்படி பட்ட மக்களைச் சீரழிக்கும் டிவி சீரியல்கள் தயாரித்திட முக்கியத்துவம் தருகிறது..

தயவுசெய்து மக்களே, இது போன்ற கேவலமான நாடகங்களைப் புறக்கணி யுங்கள்.. நாம் புறக்கணித்தால் தானே TRP ரேட்டிங் குறைந்தால் தொலைக்காட்சி நிறுவனங்கள் மக்களை சீரழிக்கும் சீரியல்களை தானே நிறுத்தி விடுவார்கள்

நமது செயல் மட்டும் இல்லை எண்ணங் களும் நமது கர்மா தான் எனவே உங்கள் விலைமதிப் பில்லா ஓய்வு நேரத்தை அன்பான குழந்தைகள் மற்றும் வீட்டில் உள்ள கணவன், மனைவி, பெரியவர்களோடும் சிரித்து பேசி பாசத்துடன் பழகி வாழ்க்கையை அனுப வியுங்கள்

குறைந்த நேரம் நல்ல தொலைக்காட்சி நிகழ்ச்சி களை பாருங்கள் மற்ற நேரங் களில் நல்ல புத்தகங்களைப் படியுங்கள். கிடைக்க கூடிய பொன்னான நேரங்களில் பிறருக்கு நன்மை செய்யும் நல்ல காரியங் களிலும் ஈடுபடுங்கள். இல்லையேல் வரும் பலன்களை நல்லதோ கெட்டதோநீங்கள் தான் அவற்றை TV பார்த்து உருவாக்கினீர்கள் என்பதை உணர்ந்து அனுபவிக்க தயாரா குங்கள். அதை விடுத்து நண்பர்களே நல்லதை பாருங்கள், கேளுங்கள், பேசுங்கள், சிந்தியுங் கள் வாழ்வில் எல்லாம் நல்லதாய் நடக்கும்.

**- D.ரவி**

# இறைவன் கணக்கு...

ஒரு கோவில் மண்டபத்தின் வாசலில் இரண்டு வழிப் போக்கர்கள் அமர்ந்திருந்தனர். இரவு நேரம், பெருத்த மழை வேறு, அப்போது அங்கே மற்றொருவரும் வந்து சேர்ந்தார். வந்தவர் “நானும் இரவு இங்கே தங்கலாமா என்று கேட்டார். அதற்கென்ன? தாராளமாய் தங்குங்கள் என்றார்கள்.

சிறிது நேரம் கழித்து எனக்கு சாப்பிட ஏதாவது கிடைக்குமா? என்றார் வந்தவர்.

இருவரில் முன்னவர் சொன்னார், என்னிடம் ஐந்து ரொட்டிகள் இருக்கின்றது என்றார். இரண்டாமவர் என்னிடம் மூன்று ரொட்டிகள் இருக்கின்றது என்றவர், ஆக மொத்தம் எட்டு ரொட்டிகள், இதனை நாம் எப்படி மூவரும் சமமாய் பிரித்துக்கொள்ள முடியும்? என்றார்.

மூன்றாம் நபர், இதற்கு நான் ஒரு வழி சொல்கிறேன், என்றார். (தேவை உள்ளவன்தான் தீர்வு சொல்வான்!)

நீங்கள் உங்கள் ரொட்டிகளை, ஒவ்வொரு ரொட்டியையும் மூன்று துண்டுகள் போடுங்கள். இப்பொது இருபத்து நான்கு துண்டுகள் கிடைக்கும்! நாம் மூவரும் ஆளுக்கு எட்டு துண்டுகள் எடுத்து கொள்ளலாம் என்றார்.

இது சரியான யோசனை என்று அப்படியே செய்தனர். ஆளுக்கு எட்டு துண்டு ரொட்டிகளை சாப்பிட்டுவிட்டு உறங்கினார்கள். பொழுது விடிந்தது, மழையும் நின்றது. மூன்றாவதாய் வந்தவர் கிளம்பும்போது, உங்கள் உதவிக்கு மிக்க நன்றி, என்று சொல்லி எட்டு தங்க நாணயங்களை கொடுத்து, நீங்கள் உங்களுக்குள் பிரித்து கொள் ளுங்கள், என்று சொல்லிவிட்டு விடை பெற்றார்.

மூன்று ரொட்டிகளை கொடுத்தவர், அந்த காசுகளை சமமாகப்பிரித்து, ஆளுக்கு நான்காய் எடுத்துக்கொள்ளலாம் என்றார். மற்றவர் இதற்கு சம்மதிக்கவில்லை. மூன்று ரொட்டிகள் கொடுத்த உனக்கு மூன்று காசுகள்.

ஐந்து ரொட்டிகள் கொடுத்த எனக்கு ஐந்து காசுகள் என்று வாதிட்டார். மூன்று ரொட்டிகள் கொடுத்தவர் ஒப்புக்கொள்ள வில்லை, என்னிடம் மூன்றே ரொட்டிகள் இருந்தபோதும், நான் பங்கிட சம்மதித்தேன்.

நிறைய இருப்பவன் கொடுப்பது ஒன்றும் பெரிய செயல் ஆகாது. அதனால் என் செய்கையே பாராட்டத்தக்கது, என்றாலும் பரவாயில்லை, சமமாகவே பங்கிடுவோம் என்றார்.

சுமுகமான முடிவு எட்டாததால், விஷயம் அரச சபைக்கு சென்றது. அரசனுக்கு யார் சொல் வது சரி, என்று புரியவில்லை. நாளை தீர்ப்பு சொல் வதாய் அறிவித்து, அரண்மனைக்கு சென்றான்.

மன்னருக்கு இரவு முழுவதும் இதே சிந்தனை. வெகு நேரம் கழித்தே தூங்க முடிந்தது

மன்னருக்கு, கனவில் கடவுள் காட்சி அளித்து, தீர்ப்பும்,விளக்கமும் தந்தார். கடவுள் சொன்ன தீர்ப்பும், விளக்கமும் மன்னரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அடுத்த நாள் சபை கூடியது. மன்னர் இருவரையும் அழைத்தார்.

மூன்று ரொட்டிகளை கொடுத்தவருக்கு ஒரு காசும், ஐந்து ரொட்டி கொடுத்தவருக்கு ஏழு காசுகளும் கொடுத்தார்.

ஒரு காசு வழங்கப்பட்டவர், “மன்னா...! இது அநியாயம். அவரே எனக்கு மூன்று காசுகள் கொடுக்க ஒப்புக் கொன்டார்” என்றார்.

அரசர் சொன்னார். நீ கொடுத்தது ஒன்பது துண்டுகள். அதிலும் எட்டு துண்டுகள் உன்னிடமே வந்து விட்டது. அவன் தந்தது பதினைந்து துண்டுகள். அவனுக்கும் எட்டுத்துண்டுகள்தான் கிடைத்தது. ஆக நீ தருமம் செய்தது ஒரு துண்டு ரொட்டி. இதற்கு இதுவே அதிகம். அவர் தருமம் செய்தது ஏழு துண்டுகள். ஒரு துண்டுக்கு ஒரு காசு வீதம் பிரித்துக் கொடுத்திருக்கிறேன்(1:7) என்றார்...

ஆம் ! கடவுளின் கணக்கு இப்படி துல்லிய மாகதான் இருக்கும்.

நீங்கள் இழந்ததை எல்லாம் தருவது அல்ல, அவன் கணக்கு. எது உங்களுக்கு தகுதியானதோ அதுதான் உங்களுக்கு. இது கடவுளின் கணக்கு.

இது கடவுளின் ஏட்டு கணக்கு இல்லை...

தர்ம புண்ணிய கணக்கு...!

நாம் செய்யும் செயலில் இறைவன் இருக்கிறார் என்பதை மறவாதீர்கள்.

# சிந்தனை முத்துக்கள்







## சிந்திக்க....

வீட்டில் அதிக பணமும், நகையும் திருடு போனவுடன் பரபரப்பானவர்களை பார்த்து "நாம நியாயமா உழச்சி சம்பாதிச்ச பணம்னா அது திரும்ப வந்திடும்" இப்படி சொல்பவர்கள் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள்.




## திருப்தியா இரு...

யானைக்கு கரும்புத் தோட்டமே தேவைப்படுகிறது....

எறும்புக்கு சக்கையே போதுமானதாக இருக்கிறது....

தோட்டம் கிடைக்கும்போது யானையாய் இரு...

சக்கை கிடைக்கும்போது எறும்பாய் இரு....

வாழ்க்கையில் திருப்தியில்லை என்ற பேச்சுக்கே இடமிருக்காது!




## சிரிங்க ப்ளீஸ்...

நீங்க கல்யாணத்துக்கு முன்னாடி எந்த கடவுளை கும்பிடுவீங்க..?

- விநாயகரை

கல்யாணத்திற்கு அப்புறம்?

அத ஏம்பா கேக்குற வேண்டாத தெய்வமே இல்லை..!





## யாரு அப்பா அது..?

அப்பா :
நான். உங்கம்மாவை
காதலிச்சதுக்காக
என்னை கட்டி வெச்சு
அடிச்சாங்க தெரியுமா..?

மகள் : எதுலப்பா
கட்டி வெச்சாங்க,
யார்ப்பா அடிச்சது?

அப்பா : என்ன
அடிக்கிறதுக்காகவே உங்க
அம்மாவ கட்டி வச்சாங்க...




உசுபேத்துரவன் கிட்ட
உம்முனும்

கடுப்பேத்துரவன் கிட்ட
கம்முனும் இருந்தா



நம்ம வாழ்கை ஜம்முனு
இருக்கும்!




## எப்படிப்பா..?

உன் வகுப்புல 45 பேர்தான்
படிக்கிறாங்களா?
எப்படி இவ்வளவு
கரெக்டா சொல்றீங்கள்?
அதான் நீ வாங்கியிருக்க
ரேங்கே சொல்லுதேடா..!

## யோசி...

பேங்க்ல போய் நாம
அடிச்சா கொள்ளை...

அதே பேங்க்காரன்
நம்மகிட்ட அடிச்சா
சர்வீஸ் சார்ஜ்...

அவ்ளோதான்
வித்தியாசம்!

முனைவர் ஆ.மவுரியன்



வீரத் தமிழச்சிகளின் வரலாறு..!

# இராணி மங்கம்மாள் 8



**ஆயினும் தஞ்சை மராத்தியர்கள், முகலாயர்கள், திருவாங்கூர் அரசு, போன்றவர்களால் சவாலைச் சந்திக்க வேண்டி இருந்தது.**

மிகத்திறமையான இராச தந்திரியாகவும், அரசியல் அறிவும் பெற்ற மங்கம்மாள் இப்பகைகளை மிகத்திறமையுடன் முறியடித்தார். ஆட்சி காலத்தில் நல்ல பல திட்டங்களைத் தீட்டி மதுரையைச் சிறப்பாக ஆண்டார். முகலாயப் பேரரசர் ஔரங்கசீப், தக்காணம் வரை தனது பேரரசை விரிவு செய்யும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திக் கொண்டிருந்தார்.

செஞ்சிக் கோட்டையில் பதுங்கி இருந்த மராத்திய மன்னன் இராசாராமைக் கைது செய்ய, தம் தளபதி சல்பீகார் அலிகான் என்பவரை அனுப்பினார். சல்பீகார் அலிகான் சுமார் ஏழாண்டு காலம் செஞ்சிக்கொட்டையை முற்றுகையிட்டான். முற்றுகை நடந்து கொண்டிருக்கும் போதே மற்ற தமிழக அரசுகளைப் பணிய வைத்துத் திறைப்பொருளைச் செலுத்த படைகளை அனுப்பினான். மைசூர் மன்னரும் தஞ்சை மராத்தியரும் பணிந்து திறை செலுத்தினர்.

இராணி மங்கம்மாளும் முகலாயர் படை வலிமையையும் தன் படை வலிமையியும் நன்குணர்ந்து முகலாயருக்குப் பணிந்துபோக முடிவு செய்தார். விலையுயர்ந்த பொருள்களை தளபதி சல்பீகார் அலிகானுக்கு அன்பளிப்பாக அனுப்பி போரைத்தவிர்த்தார். பின் முகலாயர்களின் உதவியால், மராத்தியர்களிடம் இழந்த சில பகுதிகளை மீட்டார். உடையார்பாளையச் சிற்றரசர் கைப்பற்றியிருந்த மதுரையின் பகுதிகளையும் மீட்டார்.

மதுரை நாயக்கர் அரசிற்கு இசுலாமிய அரசாலும், மராத்திய அரசாலும் சிக்கல் இருந்த போதிலும் அதனை தனக்கே உரிய சாவாலில் அரசியல் உக்தியால் வீரத்தால் எதிர்கொண்டு அனைவரையும் திகைக்க வெய்தவர் தான் மங்கம்மாள்.

செம்மையாக ஆட்சி செய்து கொண்டு இருக்கும் பொழுது, மதுரை நாயக்க அரசுக்கு உட்பட்ட சிற்றரசாக அப்போது திருவிதாங்கூர் அரசு இருந்தது. 1697-ம் ஆண்டு திருவிதாங்கூர் மன்னர் இரவி வர்மா, மதுரை நாயக்க அரசுக்கு செலுத்த வேண்டிய திறைப்பொருள்களைச் செலுத்தவில்லை. மேலும் கல்குளம் பகுதியில் இருந்த நாயக்கர் படையையும் தாக்கி அழித்தான். திருவிதாங்கூர் மன்னன் ரவி வர்மன் சற்று மதுரை மன்னர்களை மதிக்காமல் இருந்து வந்ததை அறிந்த ராணி, தளவாய் நரசப்பையா தலைமையில் மங்கம்மாள் அனுப்பிய படை திருவிதாங்கூர் படையைத் தோற்கடித்தது. திறைப்பொருளாக பொன், பீரங்கி முதலிய பொருள்களையும் பெற்றுத் திரும்பியது.

தஞ்சையை ஆண்ட மராத்தியருக்கும் மதுரை நாயக்கர்களுக்குமிடையில் நல்லுறவு நிலவவில்லை. தஞ்சை மராத்திய மன்னர் ஷாஜி, மதுரை நாயக்க மன்னர்களின் ஆட்சிப்

பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றிக் கொண்டார். இராணி மங்கம்மாள் தளவாய் நரசப்பையரை படைகளுடன் அனுப்பி அப்பகுதிகளை மீட்டார். அப்படை தஞ்சையை அச்சுறுத்தியது.

எனவே தஞ்சை அமைச்சர் பாலாஜி பண்டிதர் இராணி மங்கம்மாளின் படைகளுக்குப் பெரும் பொருள் கொடுத்து அனுப்பினார். முகலாய அரசு தக்கானத்தை தன் ஆட்சியின் கீழ் கொண்டு வர நினைத்த அதே வேளையில் மைசூர் மன்னன் சிக்க தேவராயன் தனது ஆட்சியை விரிவாக்க எண்ணி மதுரையின் ஆளுகைக்குக் கீழ் இருந்த சேலம் மற்றும் கோயமுத்தூரைக் கைப்பற்றினான்.

1695-ல் திருச்சிராப்பள்ளி கோட்டையையும் முற்றுகையிட்டான். இராணி மங்கம்மாளின் படைகளால் அம்முற்றுகை முறியடிக்கப்பட்டது. சிக்கதேவராயன் தஞ்சை மற்றும் திருச்சிக்கு நீர் ஆதாரமாக விளங்கும் காவிரி நதியின் குறுக்கே தற்போது கண்ணம்பாடி அணை உள்ள பகுதியில் அணை கட்டி அதனைத் தடுக்க எண்ணினான். அப்போது மங்கம்மாள் 1700-ல் தஞ்சையுடனான பகையை மறந்து அதனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, தஞ்சை-மதுரைக் கூட்டுப்படை ஒன்றை உருவாக்கினார்.

படை கிளம்பும் வேளையில் மைசூர்ப் பகுதி களில் கடும் மழை பெய்ததால் சிக்க தேவராயன் கட்டிய அணை உடைந்தது. சிக்கல் எதுவும் இல்லாமல் இப்பிரச்சினை தற்காலிகமாக முடிவடைந்தது. தஞ்சை நாயக்கர்களும், மதுரை நாயக்கர்களும் எதிர் எதிர் என்றாலும் எதிரியை வீழ்த்த ஓரணியில் நிற்க வேண்டும் என்பதால் 1700-ம் ஆண்டு சிக்க தேவ ராயர் என்ற மைசூர் மன்னனை கூட்டணியில் வீழ்த்தினார்.

இராணி மங்கம்மாளின் முதலும் கடைசியு மான மிகப்பெரிய தோல்வியாக ராமநாதபுரம் போர் இருந்தது. மதுரைக்கு எதிராகவும் தஞ்சைக்கு ஆதரவாகவும் ராமநாதபுரம் மன்னர் ரகுநாத சேதுபதி இருந்ததால் 1702-ல் ரகுநாத சேதுபதிக்கு எதிராக இராணி மங்கம்மாள் தனது படைகளை அனுப்பினார். இந்த போரில் மதுரையின் தொடர் வெற்றிகளுக்குக் காரண மான தளவாய் நரசப்பைய்யா வீர மரணம் அடைந்தார். இது போரின் தோல்விக்கு மிக முக்கியக் காரணமாக அமைந்தது. மதுரை நாயக் கர்களைப் போலவே மங்கம்மாளும் சமயப் பொறையைக் கடைப் பிடித்தார்.

“ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தைப் கைக்கொண்டு வாழ்வதே தருமம் என்ற கொள்கையைக் மங்கம்மாள் பின்பற்றினார். மதுரை மீனாட்சி அம்மனுக்கு பல்லக்கு மற்றும் பொன்னணிகள் பலவற்றை வழங்கினார். ஆணித்திங்களில் ஊஞ்சல் திருவிழா நடத்த ஏற்பாடு செய்தார். மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் விழாக்கள் நடை பெறும்போது, இராணி மங்கம்மாள் தமது செங்கோலை அம்மனின் முன்வைத்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

சித்திரை முழுமதி நாளில் இராணி மங்கம் மாளும் இளவரசரும் தமுக்கம் அரண்மனையில் தங்கி, மீனாட்சி திருமணத்தைக் கண்டு களித் தனர். ஆற்றில் இறங்கும் கள்ளழகரை அவர்கள் இருவரும் வழிபட்டனர். இன்று பெரிதாகப் பேசப்படும் மதங்கள் தொடர்பான நல்லிணக் கத்தை திருமலை நாயக்கர் தொடங்கி மங்கம் மாள் வரையிலான நாயக்க வம்சத்தினர் இயல் பாகக் கடைப்பிடித்தார்கள்.

சமணர்கள் கழுவேற்றப்பட்ட மதுரையில் மத உணர்வு எந்த அளவுக்கு தீவிரமாக இருந் ததோ அதே மதுரைச் சீமையில் மத சமரசம் நிலவச் செய்திருக்கிறார்கள் நாயக்க வம்சத்தினர். ராணி மங்கம்மாள் இந்து மதத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவர். ஒவ்வொரு நாளும் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கும் ஆண்டாள் கோயி லில், ஆண்டாளுக்கு நைவேத்யம் ஆகிவிட்டது’ என்று தெரிந்த பிறகுதான் மங்கம்மாள் சாப் பிடுவார். தான் ஒரு இந்துவாக இருந்த போதும் கிறிஸ்துவர் மற்றும் இசுலாமியர்களையும் மதித்தார்.

கிறித்துவ மத குருமார்களை சமயப் பேருரை செய்ய அனுமதி அளித்தார். சமயத் தொடர்பாக சிறை வைக்கப்பட்டிருந்த ‘மெல்லோ பாதிரி யாரை விடுதலை செய்ததோடு, போசேத் என்ற குருவைத் தம் அரசவையில் வரவேற்று விருந் தோம்பினார். இசுலாமியர்களுக்கும் மங்கம்மாள்

ராணி மங்கம்மாளை பற்றிய கும்மி பாட்டு:
**வீராதி வீரம்மம்மா வீரகுலத்து ராணியம்மா**
**ராஜகம்பளத்து நாயக்கர் குலம் பிறந்த**
**ராணியார பாரு, ராணி மங்கம்மானு பேரு**
**கோவில் குளம் கட்டி வெச்சு, சரித்திரத்தில் இடம் பிடிச்ச**
**சாதனையாளர் யாரு ராணி மங்கம்மானு பேரு..**
**மதுரைய ஆண்டவங்க மானமுள்ள ஜாதியிங்க,**
**மறக்குல ராணியம்மா மங்கயர்குல திலகமம்மா.**
**ராணியார பாரு ராஜ கம்பளத்து ஆளுகள பாரு ..**
**மண்ணு உள்ளவரை மங்கம்மாளை பாடி நிற்கும்**
**நாடு உள்ளவரை நாயக்கர் புகழ் பாடி நிற்கும்**
**தந்தனனனே நானே தானே தந்தேநானே நானே...**

மானியம் அளித்தார். 1701-ல் இசுலாமியர்களின் நல்வாழ்விற்காகவும் பள்ளிவாசல் பாதுகாப்பிற் காகவும் திருச்சியிலுள்ள நிலங்களை மானியமாக வழங்கியது குறித்துக் கல்வெட்டு கூறுகிறது. மதுரை சவுராஷ்டிர சமூகத்துக்குப் பிராமண அந்தஸ்து வழங்கினார்.

1704-1705- ம் ஆண்டு சௌராஷ்டிரர்கள் பூணூல் அணியலாமா என்ற வழக்கு ராணி மங்கம்மாள் முன் வந்த போது, அவர்களும் வடநாட்டிலிருந்து வந்த அந்தணர்களே. ஆகையால் அவர்கள் பூணூல் அணியலாம் என்று கவிதார்க்க சிம்மம், தண்டலம் வெங்கட கிருஷ்ணய்யங்கார் போன்றோர் அடங்கிய அறிஞர் குழு தீர்மானிக்க, ராணி மங்கம்மாள் அவ்வாறே ஆணை இட்டார். இது தொடர்பான சாசனம் தெலுங்கில் உள்ளது.

இன்றும் மதுரையில் கணிசமான எண்ணிக் கையில் வாழும் சௌராஷ்டிர சமூகத்தினர் பூனூல் அணிகிறார்கள். ராணி மங்கம்மாளும் கோவில் கட்டுவதை மட்டும் எண்ணாமல் மக்கள் நலம் பேணும் பல அறச் செயல்களைச் செய்தார். மதுரையில் பெரியதொரு அன்னச் சத்திரம் அமைத்தார். அது மங்கம்மாள் சத்திரம் என இன்றும் அழைக்கப்படுகிறது. புதிய சாலைகள் பலவற்றை அமைத்தார். கன்னியா குமரிக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலை மங்கம்மாள் சாலை என அழைக்கப்படுகிறது.

நகரங்களை அமைத்தல், குதிரைகள், பசுக்கள், காளைகள் முதலியவை நீர் அருந்துவதற்காக சாலையோரங்களில் தண்ணீர்த் தொட்டிகள் அமைக்க ஆணையிட்டார். பொது மக்களுக்காக குடிநீர் ஊருணிகள், கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டச்செய்தார். கம்மாய், ஏரி, குளம் அமைத்தல் போன்ற சமுதாய பணிகளை செய்து வந்தார். தொழில் வளர்ச்சி, வாணிகம், மக்கள் தொடர்பு ஆகியவற்றிற்கு வழிவகுத்தார்.

கொள்ளிடத்தில் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் துன்புற்ற போது அவர்களுக்கு உணவு, உடை, வீடு மற்றும் பாதுகாப்பு வசதிகளை வழங்குவதற்கு ஆணையிட்டார். இதற்கு முன் நாட்டை ஆண்ட யாரும் சமுதாய பணிகளை ராணியை போல செய்தது கிடையாது. வெள்ளத்தால் அழிந்த கரையோரத்துச் சிற்றூர்களையும் சீரமைத்தார். தற்போது மகாத்மா காந்தி அருங் காட்சியகமாக விளங்கும், தமுக்கம் அரண் மனையே இராணி மங்கம்மாளின் கோடைக் கால அரண்மனையாகும். இதிலுள்ள தமுக்கம் மைதானத்தில் தான் அக்காலத்தில் யானைச் சண்டை முதலான பொழுதுபோக்கு விளை யாட்டுகளும் அரச விழாக்களும் நடைபெற்றன.

மதுரை, ராமநாதபுரம், தூத்துக்குடி போன்ற வறண்ட மாவட்டங்களுக்கு ஏரி, குளம், கம்மாய் அமைத்து விவசாயத்தை ஏற்படுத்தியது. 'மங்கம்மாள் சத்திரம்' என்று பல அமைத்து பாதசாரிகளுக்கு உணவு, தங்கும் வசதி ஏற்படுத் தியுள்ளார். இன்றளவும் அதனை தெற்கு சீமையில் பார்க்கலாம்.

வறண்ட நிலங்களில் விவசாயத்தை பரப் பியது, திருட்டு தொழில் செய்வோரை திருத்தி மறு வாழ்வு ஏற்படுத்தியது, கல்வி நிலையம் அமைத்தது போன்ற அறிய பல சாதனைகளை செய்தவர் தான் வீரமங்கை ராணி மங்கம்மாள். மிகத்திறமையாக ஆட்சி செய்த இராணி மங்கம்மாளால் தனது பேரனான விஜயரங்க சொக்கநாத நாயக்கருடன் நேரம் செலவழிக்க இயலாமல் போனது. எனவே தவறான வழி காட்டுதலின் பேரில் விஜய ரங்க சொக்கநாத நாயக்கர் இராணி மங்கம்மாளைத் தனது எதிரியாகக் கருதினார்.

எனவே தனது பேரனாலேயே அவர் சிறை யிலிடப்பட்டார். இதுவே அவரது வாழ்நாளின் இறுதியாயிற்று இராணி மங்கம்மாள் 1706-ம் ஆண்டு இவ்வுலகை விட்டு மறைந்தார்.



# விடுதலையான குழந்தைகள்..!

ஒன்றாம் மற்றும் இரண்டாம் வகுப்பு குழந்தைகளுக்கு வீட்டுப்பாடம் வழங்கக் கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டு இருக்கிறது. மீறினால் பள்ளி அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவு நிச்சயம் வரவேற்கத்தக்க ஒன்று.

இப்போது மழலை மாறும் முன்பே குழந்தைகள் நர்சரி பள்ளியில் சேர்க்கப்பட்டு விடுகிறார்கள். எல்கேஜி, யுகேஜியில் கூட வீட்டுப் பாடம், அசைன்மென்ட் வழங்கப்படுகிறது. இதனால் கல்வியை மகிழ்ச்சியுடன் அணுக வேண்டிய குழந்தைகள் ஆரம்பம் முதலே பதற்றத்துடன் அணுக வேண்டிய சூழல் உருவாக்கப்பட்டு விடுகிறது.

சட்ட திட்டங்களை மீறி, சிபிஎஸ்இ பாடத் திட்டங்களை மீறி பாடப்புத்தகங்கள், பாடத் திட்டங்கள் தனியார் பள்ளிகளில் இணைக்கப்படுகின்றன. இதனால் மாணவர்களுக்கு புத்தக சுமை அதிகரிக்கப்படுகிறது. குழந்தை மனநிலை மாற்றப்படுகிறது. ஆர்வமாக கற்க வேண்டிய கல்வி, அவசரமாக திணிக்க வேண்டிய நிலை தற்போது இருக்கிறது. இதற்கெல்லாம் நீதிமன்றத்தின் உத்தரவு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது.

இதன் மூலம் குழந்தை பருவம் தொலைக்கப்படுவது தடுத்து நிறுத்தப்படும். பெற்றோர்களுக்கும் இந்த உத்தரவு நிச்சயம் ஒரு பாடத்தை கற்பித்துக்கொடுக்கும். எதிர்காலம் என்று நினைத்துக்கொண்டு சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நர்சரி பள்ளியில் இருந்தே கல்விக்கான கெடுபிடிகளில் வளர்க்கிறார்கள்.

பள்ளி முடிந்து வீடு வந்தாலும் சூழல் மாறாத நிலை, அந்த பிரமிப்பு, மிரட்சி நிச்சயம் குழந்தைகளுக்கு இருக்கும். இனி இரண்டாம் வகுப்பு வரை இந்த கெடிபிடி இருக்காது. குழந்தைகளுக்கு கூடுதல் விளையாட்டு நேரம் கிடைக்கும்.

இந்த சூழலில் உயர்நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளிகளில் விளையாட்டு வகுப்புகள் தொலைந்து வருவது குறித்தும், இதனால் மாணவர்களின் உடற்திறன் குறைந்து வருவது குறித்தும் பள்ளிகல்வித்துறை கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். எனவே பாடவாரியான ஆசிரியர்கள் நியமனத்தில் காட்டும் அக்கறையை, நிச்சயம் உடற்கல்வி ஆசிரியர்கள் நியமனத்தில் அரசு மேற்கொள்ள வேண்டும்.

அவர்களும் பட்டம் முடித்து, பட்டயம் பெற்றவர்கள். அதோடு தலைமை ஆசிரியருக்கு அடுத்தபடியாக முழுநேரமும் பள்ளி நடவடிக்கையில் கவனம் செலுத்தக்கூடியவர்கள். எனவே பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதோடு அனைத்து மெட்ரிக் மற்றும் சிபிஎஸ்இ பள்ளிகளிலும் விளையாட்டு வகுப்பு முறைப்படி நடைபெறுவதை ஆய்வு மூலம் உறுதி செய்ய அரசு போதுமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்று அரசு எடுக்கும் ஒருசில நடவடிக்கைகள் தான் மாணவ பருவத்தை செதுக்கி, எதிர்கால சமூகத்தை வலிமையும், சிந்தனை வளமும் உள்ள எழுச்சி மிக்க ஒன்றாக மாற்றும். அதோடு கட்டணம் முதல் கட்டுப்பாடு வரை கசக்கி பிழியும் தனியார் பள்ளிகளுக்கு கண்காணிப் பாகவும், கடிவாளமாகவும் அமையும்.

**- எம்.சத்தியராஜ்**




# கொள்ளையடிக்கும் மோசடிப் பேர்வழிகள்

**காஞ்சிபுரம் பகீர் ரிப்போர்ட்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாட்கோவின் மூலம் கடனுதவி வழங்குவதாக தம்பட்டம் அடித்துக் கொண்டு தான்தோன்றித் தனமாக செயல்படும் மாவட்ட நிர்வாகம், (தாட்கோ) ஏழை எளிய இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு, இத்துறை யின் மூலம் ஆண்டுதோறும் மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவி வழங்கி, படித்த வேலை வாய்ப்பற்ற மக்களுக்கு சுய முன்னேற்றத்திற்காக தொழில் முனைவோரை உருவாக்கி, தலித் மக்களை பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு அடைய உருவாக்கப்பட்டதுதான் தாட்கோ கடனுதவி திட்டம்.

ஆனால், இத்திட்டத்தின் மூலம் குறைந்த பட்சம் இருபைத்தைந்து சதவீதமே (25%) பலன் அடைந்து இருப்பதாக எங்கள் ஆய்வில் தெரிய வருகிறது. தாட்கோ நிறுவனத்தால் ஆதிதிராவிடர் மக்களின் முன்னேற்றத்திற்கான முன் வரைவுகள் இருந்தும் ஏனோ அதனை கடைப்பிடிப்பதில்லை.

மாவட்ட ஆட்சியரின் தலைமையில் இயங்கி இதில் மாவட்ட முன்னோடி வங்கி (Lead Bank) தாட்கோ மேலாளர் சம்பந்தப்பட்ட, வங்கியின் மேலாளர்கள், உறுப்பினர்கள், மாவட்ட ஆதி திராவிடர் முற்றும் பழங்குடியினர் அலுவலர், ஆகியோரின் முன்னிலையிலும் அவர்களின் கையொப்பமிட்ட கலந்தாய்வின் (கூட்ட) ஒப்புதல் ஏதுமின்றி சலனமில்லாமல் மிகவும் அமைதியாக தாட்கோவின் பயனாளி தேர்வு மானிய ஒதுக்கீடு போன்றவைகள் அம்மக்களுக்கு தெரியாமல், மாற்று சாதியினரும் பயன்படும் வகையில் மிகவும் நேர்த்தியாக, தாட்கோ மேலாளரும் மாவட்டத்தில் இயங்கி வரும் கூட்டுறவு சொசைட்டிகளின் செயலாளர்களும் கூட்டு கொள்ளை அடித்து வருவது எமது செய்தித்தாள், ஊடங்களிலும் இந்த கூட்டுக் கொள்ளை செய்தி வெளி வந்ததும், அம்பலப் படுத்தியும் ஏனோ தமிழக அரசும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரும் கண்டுகொள்ளாமல் இருப்பது தலித் மக்களின் வளர்ச்சியை புறக்கணிப்படுகிறது.

மேலும் தாட்கோ மானியத்துடன் கடனுதவி வழங்காமல் காஞ்சிபுரம் மாவட்டம், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட நெற்குணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பல கோடி ரூபாய் மானியம் மோசடி செய்திருப்பது சமீபத்தில் தெரிய வந்துள்ளது.

தலித் மக்களின் வளர்ச்சிக்காக ஒதுக்கப் படும் நிதி வேறு தனி நபரின் சுய வளர்ச்சிக் காக பயன்படுவது கண்காணிப்பு சரியில்லாத தையே காட்டுகிறது. இவ்வாறு கொள்ளையடிக் கப்பட்ட மானியத் தொகை பலகோடி ரூபாய்க்கு யார் பொறுப்பு? சட்டம் தான் கடமையைச் செய்யுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல சொசைட்டி களில் இதுபோன்று நடந்திருப்பது வெளிச்சத் திற்கு அடுத்து வரும் இதழில் நெற்குணம் சொசைட்டியில் தாட்கோவின் பணம் ஏழை களின் பெயரில் மோசடி செய்தவர்களின் விவரம் விரைவில் வெளிவரும்.

**- ஞானவேல்**

# சாக்கடையான நாகநதி

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், ஆரணி டவுன், கண்டல நாகநதி மேற்கு தொடர்ச்சி மலையில் தோன்றி படைவீடு வழியாக ஆரணியில் அருள்மிகு பெரியநாயகி சமேத, புத்திர காமேஸ்வரர் என்ற சரித்திர புகழ் வாய்ந்த சக்திமிகு ஆலயமாகும்.

இத்திருக்கோயில் அயோத்தியை ஆண்ட தசரத சக்கரவர்த்திக்கு நீண்ட நாட்களாக குழந்தை பாக்கியம் இல்லை. தனக்குப் பின் நாட்டை ஆள இளவரசர் இல்லாததால் தசரதர் மிகவும் வருந்தி குழந்தைப் பேறு உண்டாவதற்கு வழி சொல்லும்படி தன் குல குரு வசிஷ்டரிடம் ஆலோசனைக் கேட்க அவர் தன் தவ வலிமையால் இத்தலத்தை சுட்டிக்காட்டி சிவனை வழிபட குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்றார்.

அதன்படி தசரதர் ஆரணி ஸ்ரீ புத்திர காமேஸ்வரர் ஆலயத்தில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து ரிஷிய சிருங்க மகரிஷி தலைமையில் புத்திர காமேட்டி யாகம் நடத்தி சிவனை வழிபட்டார். அதன்பின் தசரத சக்கரவர்த்திக்கு ராமர், பரதன், லட்சுமணன், சத்துருக்கண் என நான்கு குமாரர்கள் பிறந்தனர். இதனால் பிரதான வழிப்பாட்டு ஸ்தலமாக உள்ளது.

இதுதவிர திருமண தடைகள் ராகு, கேது, தோஷங்கள் போன்ற பரிகார ஸ்தலமாகவும் போற்றப்படுகிறது. மூன்று யுகங்களுக்கு முன்ஜம தக்னி முனிவரின் கமண்டலத்தி லிருந்து ஜலம் கொட்டி நதியாக பெருக் கெடுத்தது. கமண்டலத்திலிருந்து ஜலம் கொட்டி உற்பத்தி ஆனதால் கமண்டல நிதி என்றும் மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து வேறு புரம் ஆறு உருவாகி அமிரிதி வழியாக வந்து கமண்டல நதியுடன் இணைந்து உள்ளதால் கமண்டல நாகநதி என்று பெயர் பெற்றது.

மேற்கே இருந்து கிழக்கு நோக்கி வரும் நதி திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி, புத்திரகாமேஸ்வரர் ஆலயம் முன்பாக வடக் கிலிருந்து தெற்கு நோக்கி பாய்ந்து மீண்டும் கிழக்கு நோக்கி செய்யாற்றில் கலக்கிறது. இவ்வாறு சிறப்புமிக்க கமண்டல நாகநதியை புண்ணிய தலமான காசிக்கு இணையாக போற்றப்படுகிறது.

சிறப்புமிக்க சரித்திர புகழ்வாய்ந்த நதியில் குப்பைகள், கோழி கழிவுகள், மருத்துவ கழிவுகள், அரிசி ஆலைகளின் கழிவுகள்



அனைத்தும் கமண்டல நாகநதி செல்லும் ஆரணி நகராட்சிக்கும் பொதுப்பணி கட்டுப் பாட்டு வாரிய அதிகார வரம்புக்குட்பட்ட ஆற்றின் மைய பகுதிகளில் கொட்டி, ஆற்றின் சிறப்பு தன்மை மற்றும் மாண்பையும் கெடுக்கும் நிலையில் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டு நோய் பரவும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் ஸ்ரீ புத்திர காமேஸ்வரர் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் கூறுகின்றார்கள். இதனால் துர்நாற்றம் அப்பகுதியில் ஏற்பட்டுள்ளது.

கோழிக் கழிவுகள் மற்றும் திடக்கழிவுகள் சமூக விரோதிகளால் ஆற்றின் மைய்ய பகுதிகளில் கொட்டடப்படுகிறது.

மேலும் சுகாதாரத்தை பேணிக்காக்கும் பொறுப்பில் இருக்கும் ஆரணி நகராட்சியே ஆரணி நகரில் சுத்தப்படுத்தும் கழிவுகளை ஆரணி கமண்டல நாகநதியின் மைய பகுதியில் கொட்டி சுகாதார சீர்கேட்டிற்கு காரணமாக இருக்கின்றார்கள். இதனால் பொதுமக்கள் பல நோய்களுக்கு ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.



மேலும் நோய்கள் பரவாமல் இருக்க திருவண்ணாமலை மாவட்டம் நிர்வாகமும், ஆரணி நகராட்சி நிர்வாகமும், பொதுப் பணித்துறை நீர் ஆதாரம் மற்றும் மாசுக் கட்டுப்பாடு வாரியம் துரித நடவடிக்கை எடுத்து கழிவுகளை அப்புறப்படுத்தி எதிர் வரும் நோய்களில் இருந்து பொதுமக்களை காப்பாற்றவும் ஸ்ரீ புத்திர காமேஸ்வரர் ஆலயம் மற்றும் கமண்டல நாகநதி புணிதத்தையும் காப்பாற்றவும் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் தமிழக அரசுக்கு கோரிக்கை வைக்கின்றனர்.

- சத்தியநாராயணமூர்த்தி


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும் துடிப்பான, உண்மையை வெளிக்கொணர சேவை மனப்பான்மையுடன் பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை ✷ அருணை முரசு

## Cell : 93821 33334 / 63819 50149

**Email : writermouriyan@gmail.com**



# இருண்டு போன இருளர் காலனி...

## கண்டுகொள்ளாத தமிழக அரசு

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தின் அருகில் ஒளி வீசும் தமிழக அரசின் அலுவல கங்கள் அதன் அருகில் இடிந்து கிடக்கும் வீடு களுடன் இருண்டு கிடக்கும் இருளர் இன மக்கள் அதிகாரத்தில் இருக்கும் அரசியல் பிரமுகர்களா லும், ரியல் எஸ்டேட், தொழில் அதிபர்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இம்மக்களை அங்கிருந்து வெளியேற்றம் நோக்கத்தோடு அரசு அதிகாரிகளின் துணை யோடு, அரசு அதிகாரங்களை பயன்படுத்தி அம்மக்களை அங்கிருந்து விரட்டி அடிக்கும் நோக்கத்தோடு அரசு,

காவல்துறை, வருவாய் துறை, ஊரக வளர்ச்சித் துறை, கிராம பஞ்சாயத்து ஆகியன தனி அதிகாரத்தை கொண்டு இத்துறைகளின் அடியாட்களை கொண்டு வெளியேற்ற முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இம்மக்களை குடிநீர், சுகாதாரம், சாலை வசதி போன்ற அத்தியாவசிய அடிப்படை வசதி களை செய்து தராமல் அவர்களை புறம்தள்ளி கேலி கூத்தாக்கும் நோக்கத்தோடு செயல்பட்டு வரும் மாவட்ட நிர்வாகம், ஊராட்சி துறை அமைப்புகள், போன்றவற்றை சீர் செய்து இம்மக்களுக்கு தேவையான வாழ்வாதாரத்தை ஏற்படுத்துமா?

பாம்புகள், பல்லிகள், தேள், பூரான் போன்ற விஷ ஜந்துக்கள் இடையே இம்மக்களின் வாழ்வும், உயிரும் ஒவ்வொரு நாளும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். என்ன பாவம் செய்தார்கள்? இந்திய தாயின் மக்களாக பிறந்ததற்கு என்ன பாவம் செய்தோம். நாளை இளைய தலைமுறைகள், அவர்களின் கேள்விக் குறியாகும் நிலை.

இங்கே வருவாய் துறை ஏன் அவர்களுக்கான பட்டா வழங்கவில்லை. இங்கே மின்சார துறை அவர்களுக்கான மின் இணைப்பு இரவு நேர மின் விளக்குகள் ஏன் சீர் செய்யப்பட்டு ஒளிர வில்லை. அதிகார பலம், பணம், பலம், உள்ளவர் களுக்குத்தான் தமிழக அரசா? ஏழை எளியவர் களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்திற்கு இல்லையா? வறுமை நிலையில் கூலி வேல செய்து அன்றாடம் பிழைப்பு நடத்தி தன் பிஞ்சு குழந்தைகளை நெஞ்சில் சுமந்து தவிக்கும் தாய்மாரின் அடிப்படை உரிமைகள் வாழ்வாதாரங்கள் மறுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீடுகளில் தினம் தினம் உயிருக்கு போராடி வரும் இம் இருளர் இன மக்களின் அவல நிலையை கண்டுகொள்ளுமா நமது மாவட்ட நிர்வாகமும், தமிழக அரசும்? இங்கே தனிமனித சுதந்திரம் ஜனநாயகம் என்னவானது?

உலக வரலாற்றில் களப்பிரர் காலம்தான் இருண்ட காலம் என்றனர். ஆனால் இவ்வளவு டிஜிட்டல் முறைகளை கையாளும் நம் நாட்டில் அதானிகளும், மதானிகளும், அம்பானிகளும் வாழும் இந்த நாட்டில் இந்த ஏழை இருளர் இன மக்களுக்கு வீடு இல்லை என்றால் வெட்கக் கேடாகும். உயிர் என்பது நாட்டை யாளும் அரசனுக்கும் செருப்பு தைக்கும் தொழி லாளர்களுக்கும் இருளர் இன மக்களுக்கும் உயிர் என்பதை ஒன்றாகத்தான் வைத்து இருக்கிறான் இறைவன். சமரசம் ஆவது எங்கே? அது பூமி தாயின் மடியில் என்பது இங்கே!.

எங்கே சமரசம்? எங்கே சமநீதி அனைத்தும் இங்கே அநீதி எனவே மாவட்ட நிர்வாகமும் தமிழக அரசும் இந்த இருளர் இன மக்களின் அவல நிலையை போக்குமா?

- A.C.குமார்



# அதிகரிக்கும் வைரஸ் காய்ச்சல்..!

வைரஸ் காய்ச்சலை கட்டுப்படுத்தும் நிலவேம்பு கசாயம், நொச்சி செடி வளர்க்கும் திட்டங்கள் கடந்த ஓராண்டாக முடக்கப்பட்டுள்ளது. நிபா வைரஸ் காய்ச்சல் காரணமாக மீண்டும் தொடங்க சுகாதார துறையினர் திட்டமிட்டுள்ளனர்.

தமிழகத்தில் வைரஸ் காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. காய்ச்சல் தடுக்க, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க நிலவேம்பு கசாயம் வழங்கும் திட்டம் கடந்த 3 ஆண்டாக நடை முறையில் இருக்கிறது. ஆனால் சுகாதார துறையும், உள்ளாட்சி நிர்வாகமும் கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் இந்த திட்டத்தை முடக்கி விட்டது.

நொச்சி செடிகள் மூலமாக வைரஸ் காய்ச்சல் தடுக்க முடியும். மாநில அளவில் சுகாதார துறை, உள்ளாட்சி நிர்வாகம் சார்பில் 385 ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில், 12,651 கிராமங்களில் வீடுகளில் வளர்க்கும் வகையில் நொச்சி செடிகளை இலவசமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு மே மாதம் முதல் இந்த ஆண்டு ஏப்ரல் வரை 1 கோடி நொச்சி செடி வழங்கும் திட்டம் துவக்கப்படவில்லை. இதைத் தொடர்ந்து, தமிழக அரசு சமீபத்தில் இந்த திட்டத்தை அறிவித்தது. நொச்சி இலைகளை வெது வெதுப்பான நீரில் போட்டு குளித்தால் மூட்டு வலி இருக்காது.

காய்ச்சல் உள்ளவர்கள் இந்த இலை போட்ட நீரில் குளித்தால் நிவாரணம் பெற முடியும் என்ற நிலையிருந்தது. நொச்சி இலை யில் கரோட்டின், வைட்டமின், குளுக்கோசைடு சத்து உள்ளது. எளிதில் கிடைக்கும் பாதுகாப் பான மூலிகை தாவரமாக இருப்பதால், இதை கிராமங்களில் பரவலாக வினியோகிக்க உள்ளாட்சிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

ஆனால், இதை பேரூராட்சி, நகராட்சி, ஊராட்சி நிர்வாகங்கள் செயல்பாட்டிற்கு கொண்டு வராமல் கிடப்பில் போட்டுவிட்டது. டெங்கு காய்ச்சலை தொடர்ந்து நிபா வைரஸ் பீதியை கிளப்பி வருவதால், நொச்சி செடி திட்டத்தை மீண்டும் அறிவிக்க சுகாதார துறையினர் திட்டமிட்டுள்ளனர்.

- R. ஜெயா





# இந்தியாவில் மருந்து காப்புரிமை முறைப்படிதான் வழங்கப்படுகிறதா?

மருந்துகளுக்கான காப்புரிமை வழங்குவது தொடர்பான நடைமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா எனும் கேள்வி இன்றைக்கு எழுந்திருக்கிறது. கண்டுபிடிக்கப் பட்ட மருந்து உண்மையில் வழக்கத்தில் இல்லாத ஒன்றுதான்; புதிதுதான் என்று உறுதி செய்யப்பட வேண்டும். தீவிர சோதனைகளுக்கு உட்படுத்தப் பட வேண்டும். அதன் பிறகுதான் அதற்குக் காப்புரிமை வழங்க வேண்டும்.

கடந்த 2009 முதல் 2016 வரை இந்தியக் காப்புரிமை அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ள மருந்து காப்புரிமை அலுவலகம், அத்தகைய தீவிரமான சோதனைகளை மேற்கொள்ளத் தவறி விட்டது என்று நாங்கள் செய்த ஆய்வுமூலம் தெரியவருகிறது.

1970-ம் ஆண்டு காப்புரிமைச் சட்டமானது, எத்தகைய பொருட்கள் மற்றும் செயல் முறைகளுக்குக் காப்புரிமை வழங்க வேண்டும்; எவற்றுக்கு வழங்கக் கூடாது என்பன போன்ற அம்சங்களைக் குறிப்பிட்டுள்ளது. அதில் குறிப்பாக 3(டி), 3(இ) & 3(ஐ) பிரிவுகள் எவற்றுக்கெல்லாம் மருந்து காப்புரிமை வழங்கக் கூடாது என்று சில வரையறைகளை வகுத்துள்ளன. அவை கூடுதல் புதுமைத் தன்மை யற்ற மருந்து காப்புரிமை விண்ணப்பங்களை நிராகரிக்க வழிவகை செய்கின்றன.

ஏற்கெனவே இருந்துவரும் கண்டுபிடிப்பு களில் ஒரு சில மாற்றத்தை ஏற்படுத்தி அல்லது வேறு வடிவத்தைக் காட்டி அவை புதிய கண்டுபிடிப்பு என்று குறிப்பிட்டு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள காப்புரி மையின் காலத்தை அதிகரிக்கும் நோக் கத்தோடு வரும் விண்ணப்பதாரர்களை நிராகரிக்கவே இப்பிரிவுகள் வகுக்கப் பட்டன.

கடந்த ஓராண்டாக மேற்கொள்ளப்பட்ட எங்களது ஆய்வில் மருந்து நிறுவனங்கள் காப் புரிமை அலுவலகத்தை எவ்வாறு ஏமாற்று கின்றன எனவும், நடை முறையில் உள்ள சட்டம் குறித்த புரிந்துணர்வு இல்லாமை, கவனக்குறைவு போன்ற காரணங்களால் சட்டத்துக்குப் புறம்பாகப் பல காப்புரிமைகளைக் காப்புரிமை அலுவலகம் வழங்கியுள்ளது எனவும் தெரியவந்தது.

கடந்த ஓராண்டில் வழங்கப்பட்ட 2,293 காப்புரிமைகளில் 1,654 காப்புரிமைகள், மேலே குறிப்பிட்ட சட்டப் பிரிவுகளுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய காப்புரிமைகள் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள மருந்துகள் அல்லது ஏற்கெனவே காப்புரிமை பெற்றுள்ள மருந்துகளின் வேறு வடிவங்கள்.

இவற்றில், 249 அதாவது 15% காப்புரிமை களுக்கு மட்டுமே விரிவான விசாரணை மேற் கொள்ளப்பட்டுள்ளது. அதாவது, மீதமுள்ள 1,405 காப்புரிமைகளுக்கான (85%) விண்ணப் பங்களுக்கு 'காப்புரிமை வழங்கப்படுகிறது' என்று இரண்டே வார்த்தைகளை மட்டும் குறிப்பிட்டுள்ளது காப்புரிமை அலுவலகம். ஆக, விண்ணப்பங்கள் சந்தேகத்துக்குரிய காரணி களைக் கொண்டிருந்தும் அவற்றை விரிவாக விசாரிக்கவில்லை. அத்தகைய விண்ணப்பங் களைச் சோதனைகளுக்கு உட்படுத்தி, அவை

எவ்வகையில் சிறப்பு அல்லது புதுமைத் தன்மை வாய்ந்தவை என்ற தகவல்களை ஆய்வுசெய்த விவரங்கள் காப்புரிமை அலுவல கத்திடம் இல்லை.

50 விண்ணப்பங்களில் இந்தியக் காப்புரிமை அலுவலகமானது 3(டி) & 3(இ) குறித்த ஆட்சே பணையை வெளிப்படுத்தியுள்ளது. அதற்கு விண் ணப்பதாரர்கள் 3(டி)-ன்படி கூடுதல் புதுமைத் தன்மைத் தரவுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதை முன்கூட்டியே அறிந்து, அவர்களின் விண்ணப்பங்களுக்கு அப்பிரிவு பொருந்தாது என்றும், அவ்விண்ணப்பங்கள் 3(இ)-ன் கீழ் வரும் என்றும் மருந்து நிறுவனங்கள் வாதிட்டன.

ஏனென்றால், 3(இ) பிரிவின்படி ஏற்கெனவே உள்ள ஒன்றுக்கும் மேற்பட்ட மருந்துகளின் மாதிரிகள் / இணைகள் சேர்ந்து ஒரு புதுவித ஆற்றலைத் தரும் என்பதை மெய்ப்பித்தாலே போதுமானதாகும். அத்தகைய விண்ணப்பதார ரின் வாதம் எவ்வித ஆட்சே பணையும் இல்லாமல் ஏற்றுக் கொள்ளப்பட்டு காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.

காப்புரிமை அலுவலகம், 19 விண்ணப்பங் களுக்கு 3(டி) குறித்து விளக்கம் வேண்டியது. அதற்கு விண்ணப்பதாரர்கள் பிரிவு 2(1)(ஜே)-ன் படி, அதாவது சாதாரணமாகவே பார்க்கப்படும் புதுமைத்தன்மை உள்ளது என்று விளக்கம் அளித் ததை 3(டி)-க்கான விளக்கம் என்று எண்ணிக் கொண்டு காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.

இவ்விரண்டு பிரிவுகளும் வெவ்வேறு காரணங்களுக்காக உள்ளவை. பிரிவு 2(1)(ஜே) என்பது காப்புரிமை வழங்கவேண்டும் என்றால், அவை புதுமைத்தன்மை கொண்டிருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. எனவே, இந்தப் பிரிவு அனைத்து வகையான காப்புரிமை களுக்கும் பொருந்தும்.

ஆனால் பிரிவு 3(டி) என்பது, எதற்கெல்லாம் காப்புரிமை வழங்கக் கூடாது என்று குறிப்பிட் டுள்ளது. கூடுதல் புதுமைத்தன்மை உள்ளது என்பதை மெய்ப்பிப்பது கட்டாயம் என்று நோவார்டிஸ் வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியும் காப்புரிமை அலுவலகத்துக்கு இது எப்படிப் புரியாமல் போனது என்பது தெரியவில்லை.



3(டி) & 3(இ) குறித்த ஆட்சேபணைகளுக்கு, 16 விண்ணப்பங்களில் சில வார்த்தைகளில் திருத்தங்கள் அல்லது மாற்றங்களை மேற் கொண்ட பிறகு, அவற்றுக்குக் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 63 விண்ணப் பங்கள் நோய்களைக் குணப்படுத்தும் முறை களான மருந்துகளை, நோயாளிக்குக் கொடுக்கும் முறை, அளவு போன்ற வற்றுக்காகவும் காப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

இது பிரிவு 3(ஐ)-க்கு எதிரான செயலாகும். இப்பிரிவின்படி குணப்படுத்தும் முறைகளுக்குக் காப்புரிமை வழங்கப்படக் கூடாது. ஆனால், விண்ணப்பதாரர்களின் பகட்டுச் சொல்லாடல் களாலும், வாதத் திறமையாலும் அவற்றுக்கும் காப்புரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியக் காப்புரிமை அலுவலகம் 2009 முதல் 2016 வரை வழங்கிய காப்புரிமைகளில் 72% நிராகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால், அவை யாவும் இரண்டாம் கட்ட மருந்துகளாகும். நமது நாட்டில் நடைமுறையில் உள்ள காப்புரிமைச் சட்டம் மற்ற பொருட் களைக் காட்டிலும் மருந்துகளுக்குக் காப்புரிமை வழங்குவதற்குக் கடுமையான சட்டத்தை வகுக்கக் காரணமே, உயிரைக் காக்கும் மருந்துகள், கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு, மலிவான விலையில் கிடைக்க வேண்டும் என்பதுதான்.

காப்புரிமை வழங்கும் அதிகாரிகள், சரியான புரிதல் இல்லாமலோ அல்லது விண்ணப்பதாரர் களின் பகட்டுச் சொல்லாடலிலோ விழுந்து விடுகிறார்கள் என்றால், அத்தகைய சம்பவங்கள் இனியும் ஏற்படாத வண்ணம் அவர்களுக்கு முறையான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

**- வி.அருணாசலம்**

# வழிகாட்டும்

# ஸ்மால் பைனான்ஸ் வங்கிகள்

பல்வேறு மோசடிகள், வாராக்கடன்கள் மூலம் இந்திய வங்கிகள் திணறி வருகின்றன. இவற்றை சமாளிக்க அரசின் முதலீட்டு உதவி, ரிசர்வ் வங்கியின் பிசிஏ நடைமுறை போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் எல்லா வங்கிகளிலும் பிரச்சினைகள் இருப்ப தாக சொல்ல முடியாது. சமீபத்தில் வெளியான ப்ளூம்பெர்க் நிறுவன அறிக்கையொன்று இதனை மிகத் தெளிவாக சுட்டிக் காட்டி யுள்ளது.

உலகின் மிக மோசமான வங்கிகள் இந்தியாவில் இருக்கும் அதே வேளையில் உலகின் மிக சிறப்பான வங்கிகளும் இந்தியா வில் இருப்பதாக இந்த அறிக்கை குறிப்பிடு கிறது. எனவே சிக்கல் என்பது ஒட்டுமொத்த வங்கி அமைப்பு சார்ந்த சிக்கலாக இல்லாமல் ஒவ்வொரு தனித்த வங்கியினுடைய நிர்வாகம் சார்ந்த சிக்கலாகவே இருக்கிறது.

ரகுராம் ராஜன், ரிசர்வ் வங்கியின் கவர்னராக இருந்தபொழுது அனுமதி அளித்த இந்திய ஸ்மால் பைனான்ஸ் வங்கிகளின் செயல்பாடு மிகச் சிறப்பாக உள்ளதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. மொத்த சந்தை மதிப்பு 200 கோடி டாலருக்கு அதிகமாக இருக்கும் வங்கிகளை மட்டும் இந்த ஆய்வுக்கு ப்ளூம்பெர்க் நிறுவனம் எடுத்துக் கொண்டுள்ளது. இந்திய ஸ்மால் பைனான்ஸ் வங்கிகளில் ஏயூ ஸ்மால் பைனான்ஸ் வங்கியின் பங்கு மூலம் கிடைக்கும் வருவாய் 56 சதவீதமாக உள்ளது.

இது உலக அளவில் மிகவும் அதிகமாகும். மார்கன் ஸ்டான்லி நிறுவனம் சிறந்த ரேட்டிங்கை இந்த வங்கிக்கு அளித்துள்ளது. சிங்கப்பூரைச் சேர்ந்த டெமாசெக் (temasek) ஹோல்டிங்ஸ் நிறுவனம், ஏயூ ஸ்மால் பைனான்ஸ் வங்கியின் 5 சதவீதப் பங்குகளை இந்த மாதம் 14.7 கோடி டாலருக்கு வாங்கி இருக்கிறது. இந்த வங்கியின் சொத்துகள் மூலம் கிடைக்கும் வருவாய் 10 சதவீதத்துக்கு மேலாக உள்ளது. இதேபோன்று குறிப்பிடத் தக்க இன்னொரு வங்கியாக பந்தன் வங்கி உள்ளது. இதன் சொத்துகள் மூலம் கிடைக்கும் வருவாய் 3.5 சதவீதம் என்ற அளவில் உள்ளது.

தனியார் வங்கிகளைப் பொறுத்தவரை இந்தியாவின் ஹெச்டிஎஃப்சி வங்கி, உலகின் மிகச் சிறப்பான வங்கிகளில் ஒன்றாக உள்ளது. கடந்த ஜனவரியில் ஹெச்டிஎஃப்சி வங்கியின் மொத்த சந்தை மதிப்பு 7,300 கோடி டாலராக உள்ளது.

இந்த இலக்கை அடையும் இந்தியாவின் மூன்றாவது நிறுவனமாக ஹெச்டிஎஃப்சி உள்ளது. ஹெச்டிஎஃப்சியின் மொத்த சந்தை மதிப்பு 2020-ம் ஆண்டு 10,000 கோடி டாலரை தொடும் என்கிறது கோல்டுமேன் சாக்ஸ் நிறுவனம். இண்டஸ்இந்த் வங்கி, கோடக் மஹிந்திரா வங்கி போன்றவற்றின் செயல்பாடுகளும் சிறப்பாக உள்ளன.

ரூ.13,500 கோடி அளவுக்கான மோசடி காரணமாக பஞ்சாப் நேஷனல் வங்கி உலகின்

*மிக மோசமான வங்கிகள் என்ற பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது. குறைந்தபட்ச வருவாய் காரணமாக பேங்க் ஆஃப் இந்தியா மற்றும் கனரா வங்கியும் இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளன. ஜப்பானின் சுருகா வங்கி, சீனாவின் ஜியாங்சு வங்கி போன்றவை இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள பிற வங்கிகள்.*

*பஞ்சாப் நேஷனல் வங்கியைத் தவிர்த்த பிற தனியார் வங்கிகளும், ஸ்மால் பைனான்ஸ் வங்கிகளும் சிறப்பாக செயல்பட்டு வரும் நிலையில் இந்திய பொதுத்துறை வங்கிகளின் நிலை மிக மோசமாக உள்ளது. பொதுத்துறை வங்கிகளின் மோசமான நிலைமை காரணமாக இந்திய பொருளாதாரத்துக்கு பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படும் என்கிறது இந்த அறிக்கை. இந்தியாவின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான பாரத ஸ்டேட் வங்கி கடந்த நிதியாண்டின் கடைசி காலாண்டில் 100 கோடி டாலர் அளவுக்கு நஷ்டத்தைச் சந்தித்திருக்கிறது.*

*15 சதவீதம் அளவுக்கு இந்த ஆண்டில் பாரத ஸ்டேட் வங்கியின் பங்குகள் சரிவை சந்தித்திருக்கின்றன. ஏறக்குறைய 2 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக சந்தை மதிப்பை கொண்டுள்ள பாரத ஸ்டேட் வங்கியின் வாராக் கடன் அளவும் 2 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது. வாராக் கடன் அதிகரிப்பால் 22 பொதுத்துறை வங்கிகளில் 11 வங்கிகள் பிசிஏ நடைமுறைக்குள் ரிசர்வ் வங்கியால் கொண்டுவரப்படுள்ளன. இதற்கு ஆதரவும், எதிர்ப்பும் எழுந்துவரும் நிலையில் இந்த நடவடிக்கைகள் எந்த அளவுக்கு கை கொடுக்கும் என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.*

*கார்ப்பரேட் கடனை அதிக அளவில் அளிக்கும் பொதுத்துறை வங்கிகள் தொடர்ந்து சிக்கலை சந்தித்துவரும் நிலையில், சிறு, குறு மற்றும் நடுத்தர கடன் அளிக்கும் ஸ்மால் பைனான்ஸ் வங்கிகள் சிறப்பான லாபமீட்டி வருகின்றன. வாராக்கடன் எண்ணிக்கையில் கார்ப்பரேட் கடன்கள் முதலிடத்தில் இருக்கும் நிலையில் அரசியல், அதிகார குறுக்கீடு களற்று சரியான நபர்களுக்கு மட்டும் இனி வரும் காலங்களில் பொதுத்துறை வங்கிகள் கார்ப்பரேட் கடன் அளிப்பதன் வழியாகத் தான் அவை இழந்த பெருமையை மீட்ட இயலும் என்பதை மறுப்பதற்கில்லை.*

**- இர்வின்**


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. **Email : news@makkalvisaranai.com**
**Cell : 93821 33334, 93821 44446**

# தண்டவாளத்தில் பிணங்களை தூக்கிச் செல்லும் தலித்துகள்..!

## கண்டுகொள்ளாத மாவட்ட நிர்வாகம்



காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், சோத்துப்பாக்கம் கிராமத்தில் பல காலமாக பிணங்களை தண்டவாளத்தில் தூக்கிச் செல்லும் அவலநிலை நடந்தேறி வருகிறது. பலமுறை ஆதிதிராவிட நலத்துறையிலும், மாவட்ட நிர்வாகத்திடம், தேசிய தாழ்த்தப் பட்டோர் நல ஆணையத்திடமும் மனு கொடுத்தும் போராட்டம், உண்ணாவிரதம், அறப்போராட்டம் போன்ற போராட்டங்களை நடத்தியும் செவி சாய்க்காத இம்மக்களின் அவல நிலையை யார் கேட்பார்?

"அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது"

மனிதனாக பிறந்து பல இன்னல்களையும் வாழ்க்கைக்கான போராட்டங்களையும் சந்தித்த தலித் மக்களின் கடைசி காலம் கண்டுகொள்ளாத தமிழக அரசால் இம்மக்களின் அவல நிலையை எப்போது போக்குவார்கள். ஆதிதிராவிட நலத்துறை நிதி இம்மக்களுக்கு பயன் பட்டதா பயன்படவில்லையா?.

எனவே இம்மக்களின் துயரங்களை துடைக்க மாற்று ஏற்பாடு சுடுகாடு, இடுகாடு பிணங்களை அடக்கம் செய்வதற்கு நல்லதொரு இடத்தை தேர்வு செய்து கொடுத்தால் அது அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுவதாகும். மத்திய அரசுக்கு சொந்தமான ரயில் தண்டவாளத்தில் பிணங்களை தூக்கிச் செல்லும்போது விபத்து ஏற்பட்டு பல உயிர் சேதங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் இதை தடுக்கும் விதத்தில் மாவட் நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு உரிய இடத்தை ஒதுக்கித் தந்தால் **அரசன் முதல் ஆண்டிவரை சமரசமாவது எங்கே? அது சுடுகாட்டிலே** என்ற இயற்கையின் நியாயத்திற்கு தனியொரு இடமளிப்போம்.

- குருதேவ்


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

MAKKAL VISARANAI

மக்கள் விசாரணை

மக்களின் மனக்குமுறல்

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-7 ஜூன்-2018 இதழ்-1

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்
முனைவர் **ஆ. மவுரியன்,** B.A.,Dip. Journalism,

• ஆசிரியர் குழு
முனைவர் **காசி. அரங்கநாதன், A. காதர் மொய்தீன், V. அருணாச்சலம், A.C. குமார்**

• நிர்வாக ஆசிரியர்
**வீ. சிவசங்கரன்,** B.B.A.,

• துணை ஆசிரியர்கள்
**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார், D. ரவி, எஸ். சரவணன், பி. மாரிமுத்து, வீரஆறுமுகம், T. சசிக்குமார், M. தரணி, கே.பாலாஜி, அ.மு.ரமணாத்திரி, S. சண்முகராஜ்**

• முதன்மை செய்தியாளர்கள்
**S. ராம்குமார்** சேலம் **M. சத்தியராஜ்,** நாமக்கல்.
**A. பாலகிருஷ்ணன், செந்தில்குமார்,** கோவை,
**R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா,** தென்சென்னை
**யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** கிருஷ்ணகிரி.
**பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி. **நாகராஜ்,** மூணாறு.
**மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை, **சுசீ ஈஸ்வர்,** தென்காசி.
**ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம். **சிலம்பரசன்,** தர்மபுரி,
**வெங்கடேசன்** தி.மலை **S. ரமேஷ், அ. சிவராமன்,** காஞ்சிபுரம்.

• நிருபர்கள்
**A.D. ராஜேந்திரன், P. ராமலிங்கம், ஆபரகாம், எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, V.சங்கர் ஞானவேல், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின், ஏழுமலை, பிரவின், சத்தியநாராயணமூர்த்தி, சதீஷ்குமார், N.குப்புசாமி,**

• சட்ட ஆலோசகர்கள்
**M. குணசீலன்,** B.Com.,M.L.,
**M. சுதாகர்,** B.Sc.,B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர்கள் :
**M. சந்தோஷ்சிவன், K. மணிவண்ணன்**

• இதழ் வடிவமைப்பு : **AKS Creative's**

அலுவலகம் :

**மக்கள் விசாரணை**

நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி, ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.
Email : writermouriyan@gmail.com
news@makkalvisaranai.com / www. makkalvisaranai.com
**Cell : 93821 33334 / 63819 50149**

**Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

# ஜனநாயகம் மாற்றி அமைப்போம்.!

- கவிஞர் நிவேதிதா

தூத்துகுடி கலவரம் தீப்பற்றி எரிந்தது.
கேட்போர் எவரும் இல்லை.

தன் பலம் நிரூபிக்க போராடியது அரசு.

சில பேர் வாழ பலபேர் கூடும் பெரும்
கூட்டம் தான் அரசியல் என்று எங்கோ
எப்போதோ படித்ததாக நியாபகம்.

உண்மைதான்,

இங்கு இப்போது அதுதான் நடந்து
கொண்டிருக்கிறது.

உண்மை புரியாமல் பொது சொத்துகளும்,
பொதுமக்களுடைய உடைமைகளும்
தீக்கு இரை ஆகிக்கொண்டிருக்கின்றன.

இத்தனை நாட்களாய் சேர்த்து வைத்த
அமைதி இன்று தீயில் கருகி கொண்டு
இருக்கிறது.

சாமானியர்கள், இயல்பு வாழ்க்கையை
தொலைத்து விட்டு கூட்டு புழுக்களாய்
வீட்டில் முடங்கி கிடக்கின்றனர்.

எங்கு நோக்கினும் கலவரம்.

எப்பொழுது என்ன நேருமோ என்ற பீதி.

தூண்டிவிடவும், தாலாட்டு பாடவும்
நன்கு தெரியும் நம் அரசியல்வாதிகளிடம்

நடக்கும் இந்த சம்பவங்களை
பற்றி அவர்களிடம் கேட்டால்,
மனம் உடைந்து உள்ளது.

அதனால், பேருந்துகள் உடைக்கப்பட்டு
இருக்கின்றன என்று கூறினார்கள்.

நல்ல பதில், நிச்சயம் அவர் சிலை வைக்க

அருகதை உடையவர்தான்.

டிவி இல் "என் கேள்விக்கு என்ன பதில்?"
கேள்வி கேட்டவனும் போய் விட்டான்.வான்,
பதில் சொன்னவனும் போய் விட்டான்.

அந்த நிகழ்ச்சியை வைத்து
இன்னொருவனும் பணம் பண்ணி விடுவான்.
ஆனால், தொலைந்து போன, சாமானியனின்,
அந்த ஒருநாள் வேலை கூலியை குடுக்க
எவனெனும் முன் வருவானா ?

அவனின் சொல் கேட்ட
எந்த தொலைக்காட்சியாவது முன் வருமா ?

எப்படி வரும் ? அப்படி வர நேர்ந்தால்
அவனுக்கு என்ன லாபம், ஒன்றும் இல்லை.

இந்த கலவரம் எந்த வகையிலும்
யாருக்கும் நன்மை கிடையாது
என்ற உண்மை உணர்ந்து
கலவரத்தை கை விடுதலே நன்மை தரும்.
இனியாவது ஜனநாயகம் மாற்றி
அமைப்போம்.



கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. **A. MOURIYAN,**

பொறுப்பும்! பொதுநலமும்!!

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

காவிரி நதிநீர் பெற்றிட நமக்குத் தேவை

**ஆணையமா? இல்லை வாரியமா?**

**சிறப்புக் கருத்தரங்கம்** மற்றும்


# 3வது மாநில மாநாடு

நாள் : **23-06-2018 சனிக்கிழமை**

இடம்: **ஹோட்டல் டால்பின் பார்க்,**

வேம்புலியம்மன் கோவில் தெரு, விருகம்பாக்கம், சென்னை-93

மாநில, மாவட்ட நிர்வாகிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு மாநாட்டை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.



முனைவர் **காசி.அரங்கநாதன்**
மாநில தலைவர்



முனைவர் **ஆ. மவுரியன்**
மாநில பொதுச் செயலாளர்



**அ. காதர் மொய்தீன்**
மாநில பொருளாளர்

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month


# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்




- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements

and anything












No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33344, 63819 50149**